# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய மாத இதழ்

மலர் - 15 டிசம்பர் 2002 இதழ் - 12



வெளியிடுவோர்

**கிறிஸ்துவின் சபை**

தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.

தமிழ்நாடு, இந்தியா

✆ 04257-30030, 30382. E-mail: kangayamcofc@eth.net

## அருமையான வாய்ப்பு

பரிசுத்த ஆவியானவரின் பணி (170 பக்கங்கள்) மற்றும் புதிய ஏற்பாட்டு ஆராதனை (112 பக்கங்கள்) ஆகிய நூல்கள், தரம் நிறைந்த தாளில் அழகாக அச்சிடப்பட்டு, மிக நேர்த்தியான முறையில் பைண்டிங் செய்யப்பட்டு, உங்களுடைய உபயோகத்திற்கு ஆயத்தமாக உள்ளது.

பிரசங்கிகளுக்கும், வேத ஆசிரியர்களுக்கும், வேத மாணவர்-களுக்கும், சபை அங்கத்தினர்களுக்கும் மிகவும் பயனுள்ள ஒன்று.

புத்தகம் முற்றிலும் இலவசம். ஆனால், தபால் செலவு உங்களைச் சார்ந்தது. அனுப்பப்படும் தொகை அளவுக்கு புத்தகங்கள் அனுப்பப்படும். அனுப்ப வேண்டிய குறைந்த பட்ச தொகை ரூ.20/-.

தொடர்பு முகவரி

**தமிழ் உலக ஆத்தும ஆதாயத் திட்டம்**
தபால் பெட்டி எண் 27,
காங்கயம் - 638 701. இந்தியா.

குறிப்பு: M.O. கூப்பனில் உங்கள் முகவரியைத் தெளிவாக எழுதவும்.


## ஆசானின் அறிவுரையிலே...


| | | |
|---|---|---|
| 1. | ஆசிரியர் உரை | 1 |
| 2. | மார்க்க சம்பந்தமான தவறுகளை.... | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 13 |
| 4. | வாலிபர் பகுதி | 17 |
| 5. | ரோமர் ஒரு கண்ணோட்டம் | 20 |
| 6. | சிறுவர் பகுதி | 21 |
| 7. | பரலோகம் செல்ல தகுதிகள் என்ன? | 23 |
| 8. | சபை விவாகம் மற்றும் .... | 26 |
| 9. | விசுவாசத்தின் அடிப்படைகள் | 30 |

THIRUMARAI AASAAN

*PUBLISHED BY CHURCH OF CHRIST*

**Editor**
**S. Rajanayagam**

**Honorary Editor**
**J.C. Choate**

**Dharapuram Road, Kangayam - 638 701, Tamil Nadu, India**

*Pleading for the restoration of pure New Testament Christianity*

**Vol.15** **December - 2002** **Issue-12**

**ஆசிரியர் உரை**

# "மாரி காலத்துக்கு முன்பாக வா"

மழை காலம் எல்லாம் முடிந்து, மார்கழி மாதக் குளிரும் ஆரம்பமாகி வாட்டிக் கொண்டிருக்கும் வேளையில், மாரி காலத்துக்கு முன்பாக வா என்று தலைப்பிட்டு, அதுவும் வருடக் கடைசியில் எழுதுவது எப்படி பொருத்தமாக இருக்குமென்று நீங்கள் நினைப்பது எனக்கு நன்றாகவே தெரிகிறது. பருவங்களைப் பற்றிய பரிச்சயம் எனக்கு இல்லை என்று நீங்கள் எண்ணுவதும் புரிகிறது. ஆனால் பருவங்களை முன் வைத்து நான் உங்களோடு பேச முன்வராமல், வருடக் கடைசியை மையமாக வைத்துப் பேச முடிவெடுத்திருப்பதால் எனக்கொன்றும் பெரிதாகப் பிரச்சனையில்லை.

பொதுவாகக் "**கடைசி**" என்பது வருத்தத்திற்கு வழி வகுப்பதாகவும், சஞ்சலத்திற்கு அடிகோலுவதாகவும், உணர்ச்சிகளை உள்ளடக்கியதாகவும் இருந்தாலும், வழக்கமாக வரும் இந்த "வருடக் கடைசி" என்பது அப்படிப்பட்டதல்ல. ஏதோ சில விதிவிலக்குகள் இதற்கு இருக்கலாமேயொழிய, மற்றபடி இது சிறப்புக்குரியதாகவும், மகிழ்ச்சிக் குரியதாகவுமே இருக்கும். கிறிஸ்தவ சமுதாயத்திற்குக் கேட்கவே வேண்டாம். ஒரே கொண்டாட்டம் தான். அதுவும், குறிப்பாக, சமீப காலங்களில், நாங்கள் பண்டிகை கொண்டாடுவதில் யாருக்கும் சளைத்தவர்கள் அல்ல என்பதை வெளிக்காட்ட, கிறிஸ்தவம் பெரும்பாடு பட்டுக் கொண்டிருக்கிறது. என்ன செய்கிறோம், எதற்குச் செய்கிறோம், எப்படிச் செய்கிறோம், ஏன் செய்கிறோம் என்பது பற்றியெல்லாம் கிஞ்சித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சரி, அது ஒருபுறம் இருக்கட்டும்.

இப்படி வருடக் கடைசியில், கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் கொண்டாட்டம், கிறிஸ்தவ மாத இதழ்களையும் விட்டு வைப்பதில்லை. வழக்கத்துக்கு மாறான பாணியில் யாக்கோபின் பல வருண அங்கி யோசேப்பு போல் அது எடுப்பாக பவனி வரும். இம்மாற்றம், அட்டையில் மாத்திரம் தென்படாமல், அதன் பக்கங்களிலும் இதன் தாக்கம் இருக்கும். ஆம், பண்டிகை கால சிறப்பிதழ்

என்று பெயரிடப்பட்டு வாழ்த்துக்களும், புத்தாண்டுக்கான வாக்குத் தத்தங்களும் ஆங்காங்கே அள்ளித் தெளிக்கப்பட்டிருக்கும் அல்லது தாராளமாக வாரி வழங்கப்பட்டிருக்கும். கடந்த பத்தாண்டுகளாக வருடக் கடைசியில், நாமும் அப்படி ஏன் செய்யக் கூடாது என்ற சபலம் எனக்கும் கூட ஏற்படும். அப்படிச் செய்யும் போது, அநேக வாசகர்களின் அன்பும், மரியாதையும் கிடைப்பதோடு வருமானமும் சேர்ந்து வரும். நான் சொல்வது உண்மை தானே! ஆனால், நான் சொல்லும் இந்தக் காரணங்களுக்காகத்தான் வருடக் கடைசி வருகிறதா? மாற்றம், ஆர்ப்பாட்டம், கொண்டாட்டம் இவைகளுக்காகத்தான் வருடக் கடைசி வருகிறதா? அல்லது காலங்களைக் கையிலே வைத்திருக்கிற சர்வ வல்லவருக்கு, வருடங்களைக் கூட்டி கொடுப்பதற்கு வேறு காரணங்கள் இருக்கிறதா? சொல்லுங்கள், என்னைப் பொருத்தளவில், வாழ்த்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கும், கொண்டாட்டங்களில் ஈடுபடுவதற்கும், ஒரு சிலரின் பாக்கெட் நிரம்புவதற்கும் வருடக் கடைசி வராமல், இதைவிட மேலான நோக்கத்திற்காகவே, நமது வாழ்க்கையில் இது கூட்டிக் கொடுக்கப்படுகிறது என்று திடமாக நம்புகிறபடியால், இன்றைய கிறிஸ்தவத்தின் பொதுவான வழியிலிருந்து, பிலேயாமின் கழுதை போல சற்று விலகி நின்று கொஞ்சம் வித்தியாசமாகப் பேச விழைகிறேன். வேறொன்றுமில்லை.

**"மாரி காலத்துக்கு முன்பாக நீ வந்து சேரும்படி ஜாக்கிரதைப்படு"** என்ற இவ்வரிய வசனம், தனித்துவம் கொண்ட அப்போஸ்தலனாகிய பவுல், விசுவாசத்தில் தான் பெற்றெடுத்த உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தின் இறுதிப் பகுதியில் இடம் பெற்றிருக்கிறது (2. தீமோ.4; 21). ஒட்டுமொத்த வேதாகமம்,முழுவதிலும் பவுலடியாருக்கு ஒரு சிறப்பு உண்டு. அது, அதிக புத்தகங்களை எழுதியவர் என்ற பெருமை. தெசலோனிக்கேயரில் தொடங்கி, அவர் 14, நிருபங்களைக் கிட்டத்தட்ட எழுதியிருந்தாலும், ஏனைய நிருபம் எல்லாவற்றைக் காட்டிலும், தீமோத்தேயுவுக்கான இந்த இரண்டாம் நிருபம் வேறுபட்டது. ஆம், இது, பவுலடியாரின் கடைசி நிருபம், நான் ஏற்கெனவே சொன்னது போல், **"இந்தக் கடைசியும்"**, வருத்தம், சஞ்சலம், உணர்ச்சி ஆகிய இவைகளின் கலவையாகத்தான் இருந்திருக்கிறது.

இந்நிருபத்தை, இவர் இரண்டாம் முறையாக ரோமச் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு, தன்னுடைய இக்கூடார வாழ்க்கைக்கான நாட்களை எண்ணிக் கொண்டிருக்கும் போது எழுதியுள்ளார். அவரின் சிறைவாசத்திற்கான ஒரே காரணம் அல்லது அதற்காக அவர் செய்த ஒரே குற்றம், உயிர்த்த இயேசுவைப் பின்பற்றினதும், அவரைப் பற்றி ஊரெங்கும், உலகெங்கும் பிரசங்கித்ததும்தான். பவுலடியாரின் இந்தக் கடைசி நாட்களில் அவரால் போதிக்கப்பட்டு வழி நடத்தப்பட்ட அநேகர் அவரை விட்டுப்போய் விட்டார்கள். அது அவரை எப்படிப்பட்ட மனநிலைக்குத் தள்ளியிருக்கு மென்பதை ஆத்துமபாரம் கொண்டவர்களால் சிரமமில்லாமல் புரிந்து கொள்ள முடியும். அன்றைய உலகின் ஏகசக்கரவர்த்தியாக இருந்த நீரோ மன்னனால் பவுலடியார் சிறையிலடைக்கப்பட்டதால், சட்டம் சற்று கடுமையாகவே கடைபிடிக்கப்பட்டது. ஆம், அந்நாட்களில் அவரைப் போய்ப் பார்ப்பதும், விசாரிப்பதும், தடை செய்யப்பட்டிருந்தது. அதையும் மீறி

முயற்சிப்பவர்களுக்கு சரியான தண்டனை காத்திருந்தது. அப்பொழுது, அவருடைய மரணம் தொடு தூரத்தில் இருந்தது. "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" (2.தீமோ.4; 6) என்கிறார். இப்படிப்பட்டதொரு அசாதாரண பின்னணியில்தான், எபேசுவிலிருந்த, தன் நம்பிக்கைக்குப் பாத்திரமான தீமோத்தேயுவை, சீக்கிரமாய் வா, என்று அழைக்கிறார் (4; 9, 21).

இங்கே, பவுலடியாரைப் பார்த்து நான் பிரமித்து நிற்கிறதொரு காரியத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ளாமலிருக்கமுடியவில்லை. ஆம், துரோகம், எதிர்ப்பு, மரணம் என்று, இவையெல்லாம் அவரை ஏகமாய் நெருக்கிக் கொண்டிருக்கும் போது, சீக்கிரமாய் வா என்ற தீமோத்தேயுவை, நேரடியாக வந்து சேர் என்று சொல்லாமல், துரோவா பட்டணத்திலிருக்கிற கார்ப்பு என்பவன் வசத்தில் நான் வைத்து வந்த மேலங்கியையும், புத்தகங்களையும் விசேஷமாய்த் தோற்சுருள்களையும், நீ வருகிறபோது எடுத்துக் கொண்டு வா என்கிறார்(4; 13). ஒருவேளை மாரிகாலம் சமீபமாயிருக்கிறபடியால், குளிருக்கு மேலங்கி தேவைப்பட்டிருக்கலாம். ஆனால், புத்தகங்களும், விசேஷமாய் தோற் சுருள்களும் எதற்கு? ஏதாவது விளங்குகிறதா? வாசிப்பதிலும், எழுதுவதிலும் அவர் எவ்வளவு அக்கறையும், ஆர்வமும் மரணத்தின் விளிம்பில் கூட காட்டியிருக்கிறார் என்பதை என்னவென்று சொல்வது? நாமும் தான் இந்த பூமியில் கிறிஸ்தவர்கள் என்று வாய் கூசாமல் சொல்லி வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எப்படிப்பட்டவர்களாய் உள்ளோம்? இதன் பிறகாவது, ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கப் போகிறோமா?

சரி, இப்பொழுது, இப்பகுதியிலிருந்து நம்மால் கற்றுக் கொள்ள முடிகின்ற பாடங்கள் என்னவென்று பார்ப்போம்.

## I. தீமோத்தேயுவுக்கான அவசர அழைப்பு

பவுலடியார் தீமோத்தேயுவுக்கு அனுப்பின அழைப்பிலிருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய முதல் காரியம், அவ்வழைப்பில் அவர் காட்டின தீவிரம் அல்லது அவசரம். தனது இறுதி நூலின், இறுதி அதிகாரத்தில் இரண்டு முறை "சீக்கிரமாய் என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு," "மாரி காலத்துக்கு முன்பாக என்னிடத்தில் வரும்படி ஜாக்கிரதைப்படு" என்று அழைக்கிறார்.

'வா' என்பது அன்பின் அடிப்படையிலானது, "சீக்கிரம் வா" என்பது அவசரச் சூழ்நிலைக்கானது. "சீக்கிரம் வர ஜாக்கிரதைப்படு" என்பது, எச்சரிப்புக்கானது. மூன்றாவதில் கவனம் அதிகம் தேவை. அங்கே, அவருடைய அழைப்பில் அன்பு வெளிப்படாமல் இல்லை. அவசரத்தின் நெடி வீசாமலுமில்லை. இந்த இரண்டோடு அங்கே எச்சரிப்பின் தொனியும் சேர்ந்து கொண்டது. ஆனால், இந்த எச்சரிப்பு, தனது விசுவாசக் குமாரனை மிரட்டுவதற்கு விடுக்கப்பட்ட ஒன்றல்ல. மாறாக, என் குமாரனே, ஓ தீமோத்தேயுவே, நீ செய்ய வேண்டியதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்யாமல் மாத்திரம் விட்டு விடாதே. அப்படி நீ செய்யத் தவறினால், செய்ய வேண்டியதை நீ ஒரு போதும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விடலாம். ஆகவே, என் மகனே, அந்நிலை உனக்கு வந்து விடக்கூடாது என்று

மறைமுகமாக மன்றாடுகிறார். "ஜாக்கிரதைப்படு" என்பதை நாம் இவ்விதம் தான் எடுத்துக் கொள்ள முடியும்.

அப்படியானால், செய்ய வேண்டியதைச் செய்ய முடியாமற் போய்விடுமோ என்று ஏன் நினைக்கிறார்? இதற்கு மிகச் சரியான காரணம் உண்டு. ஆம், எபேசுவிலிருக்கிற தீமோத்தேயு, ரோமாபுரிக்கு வரவேண்டுமானால், மத்திய தரைக் கடலைக் கடந்தே வர வேண்டும். இக்குறிப்பிட்ட பகுதியின் கடல் பயணம் மாரிகாலத்தில் மிகவும் ஆபத்தானது. உயிருக்கு ஊறு விளைவிக்கக் கூடியது. பவுல் ரோம் நகருக்கு வந்த போது தனக்குக் கிடைத்த அனுபவத்தை அவர் மறக்கவில்லை. அப்.27; 14-20 வசனப் பகுதியில் அது தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியின் இறுதி வசனம் இவ்விதம் கூறுகிறது. "அநேக நாளாய்ச் சூரியனாவது, நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியால், இனித் தப்பிப் பிழைப்போமென்ற நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று" (வ.20) என்று. அப்படியானால், இக்கடல் மார்க்கம் எப்படிப்பட்டதென்று நீங்களே தெரிந்து கொள்ளுங்கள். ஆகவே தான், பவுலடியார் தீமோத்தேயுவை **மாரி காலத்துக்கு முன்பாக வர ஜாக்கிரதைப்படு** என்று கூறுகிறார்.

அதுசரி, இவ்வருடக் கடைசியில் நமக்கும், இதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறீர்கள்? அப்படித்தானே. நம்முடைய வாழ்க்கையின் மாரிகாலம், அதாவது நாம் விரும்புகிறபடி ஆவிக்குரிய பயணத்தை மேற்கொள்வதற்குத் தடையேற்படுத்துகிற காலம் எதுவென்று நமக்குத் தெரியாது. எதிர்வரும் ஆண்டு, நமது ஆன்மீக வாழ்க்கைக்கு எப்படிப்பட்டதாயிருக்குமோ நாம் அறியோம். ஆனால், அதற்கு முன்பாக நாம் தேவனிடத்தில் கிட்டிச் சேர்வதற்கு இவ்வருடக் கடைசி நம்மை அழைக்கிறது என்பதே நாம் தெரிந்து கொள்ளவேண்டிய காரியம். வரும் வருடத்தில் நமது ஆன்மீக வாழ்க்கையை வளப்படுத்துவதற்கான நல்ல தீர்மானத்தை எடுக்க இவ்வருடக் கடைசி "வா" என்று அழைக்கிறது. "சீக்கிரம் வா" என்று துரிதப்படுத்துகிறது. இன்னும் வரத் தயங்குபவர்களை, "சீக்கிரம் வரும்படி ஜாக்கிரதைப்படு" என்று எச்சரிக்கிறது. இதற்கு மேலும், இவ்வருடக் கடைசியில், தேவன் நம் ஒவ்வொருவரோடும் எப்படிப் பேச வேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்?

'தேவனை நேசிக்கும் அருமையான பிள்ளையே, நம்முடைய ஆன்மீக வாழ்க்கைக்கு வலு சேர்க்க இந்த வருடக் கடைசி நமக்கு உதவக் கூடுமாகையால், இந்த வருட முழுவதுமான நாட்களை ஆவிக்குரிய ரீதியில் எண்ணிப் பார்த்து, எடை போட்டுப் பார்க்க இந்த வருடக் கடைசி சரியான தருணமாக இருப்பதால், இந்த நாட்களை நாம் அற்பமாக எண்ணிவிட வேண்டாம். நான் தேவனண்டையில் போய்ச் சேருவேன் என்று தீர்மானம் எடுப்பதற்கு இதுவே தக்க தருணம். மனித வாழ்வு நிலையற்றதா யிருக்கிறபடியால் (யாக் 4:14) , புதிய ஆண்டுக்குள் பிரவேசித்து நான் தீர்மானம் எடுத்துக் கொள்கிறேன் என்று காலத்தைத் தள்ளிப் போட வேண்டாம். இதே பவுலடியார், கொரிந்தியருக்கு எழுவது போல், ".....இதோ, இப்பொழுதே அநுக்கிரக்காலம், இன்றே இரட்சண்ய நாள்" (2.கொரி.6;2) இன்னும், எபிரேய ஆசிரியர், " இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், உங்கள்

இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" என்று சொல்வது போல், நாமும் நம்முடைய இருதயத்தைக் கடினப்படுத்தாமல், இன்றைக்கே- ஆம், நாளை வரை காத்திருக்காமல் இன்றைக்கே, இந்த வருடத்திலேயே-ஆம், அடுத்த ஆண்டுவரை காத்திருக்காமல் உடனடியாக அழைப்பை ஏற்றுக் கொள்வோம். சீக்கிரமாக ஏற்றுக் கொள்வோம். சீக்கிரமாக ஏற்றுக் கொள்ள ஜாக்கிரதைப்படுவோம். ஒருவேளை இப்பொழுது செய்யத் தவறுமோமானால் இனி செய்யமுடியாத நிலை-மாரிகால நிலை நமது ஆன்மீக வாழ்க்கையில் வரலாம். யாருக்குத் தெரியும்? அழைப்பை ஏற்றுக் கொள்வோமா?

## II. தீமோத்தேயு அழைப்பை ஏற்க தாமதித்திருந்தால்....

இப்பகுதியிலிருந்து, நம்மால் ஊகிக்க முடிகின்ற இரண்டாவது பாடம், ஒருவேளை, தன்னால் நேசிக்கப்பட்ட குமாரன், தனது ஆவிக்குரிய தகப்பனின் அழைப்பை ஏற்கத் தாமதித்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்பது.

பவுலிடமிருந்து இந்த நிருபம் வந்தவுடன், தீமோத்தேயு பஸ்கா பண்டிகைக்கு பக்தியுள்ள யூதன் ஆயத்தமாவது போல், தீவிரமாய் ஆயத்தமாகி, அவருடைய ஆவி என்றென்றும் தேவனிடம் இருக்கப் புறப்படுவதற்கு முன், அவரிடம் போய்ச் சேர்ந்து, அவருக்கு ஆறுதலாக இருந்திருக்க சகல வாய்ப்புகளுமுண்டு. அவர் தாமதித்திருக்கவோ, அழைப்பை ஏற்க மறுத்திருக்கவோ வாய்ப்பில்லை.

ஒரு வேளை கடிதத்தைப் பெற்றுக் கொண்டே தீமோத்தேயு, அழைப்பு நியாயம்தான், ஆனால், எனக்கு சில முக்கியமான வேலைகள் இருக்கிறது. அவைகளை முடித்துக்கொண்டு போகிறேன் என்று எண்ணியிருந்தாலோ அல்லது மாரிகாலம் ஆபத்தானது, ஆகவே அடுத்த பருவத்தின் ஆரம்பத்தில் போகிறேன் என்று எண்ணியிருந்தாலோ என்ன ஆகியிருக்கும்? இப்படி நினைத்து, தன்னுடைய வேலைகளையெல்லாம் முடித்து, ஆபத்தான பருவமும் முடிந்து, அடுத்த பருவத்தில் புறப்படும் முதல் கப்பலில் ஏறி பயணப்பட்டுப் போய்ச் சேர்ந்தபோது, அட அப்போஸ்தலன் பவுலா, அவர் போன மாதம் தானே மரித்தார் அல்லது போனவாரம் தானே சிரச்சேதம் செய்யப்பட்டார் என்று சொல்லப்பட்டிருக்குமானால், எப்படியிருந்திருக்கும்? எண்ணிப் பார்க்கவே எப்படியோ இருக்கிறது. ஆவி யானவர் ஞானியைக் கொண்டு, நீதிமொழிகளில் சொல்லுவது போல், **"என் போதகரின் சொல்லை நான் கேளாமலும், எனக்கு உபதேசம் பண்ணின வர்களுக்கு என் செவியைச் சாயாமலும் போனேனே!"** (5; 13) என்று புலம்போ புலம்பு என்று புலம்பியிருந்திருப்பான். ஆனாலும் இழந்தது இழந்தது தானே. போன வாய்ப்பு போனதுதானே. தன்னுடைய எஞ்சிய காலத்தில் அதன் பாதிப்பிலிருந்து விடுபட்டிருந்திருக்க முடியுமா? சொல்லுங்கள்

அருமையானவர்களே, தாமதம், உதாசீனம், அலட்சியம், மறுப்பு போன்றவை பூமியிலே மாத்திரம் பாதிப்பை ஏற்படுத்தும் என்று வாலாயிருந்து விடாதீர்கள். ஆவிக்குரிய ரீதியில், இது நித்திய அழிவையும் ஏற்படுத்தும். உதாரணமாக, ஆளுநர் பேலிக்ஸ்-ஐ எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு சமயம், தன் மனைவியாகிய துருசில்லாளுடனேகூட வந்து பவுலை அழைப்பித்து,

கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தைக் குறித்து சொல்லக் கேட்டான். பவுல், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் **பயமடைந்து:** இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது, உன்னை அழைப்பிப்பேன் என்றான்" (அப்.24; 24, 25). அந்த ஆளுநர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளுமளவும்; கிறிஸ்துவின் சபையில் அதன் மூலம் கர்த்தரால் சேர்க்கப்படவும் உடனடியாக வாய்ப்புக் கிடைத்தது. "**அவன் பயமடைந்தான்**" என்று வேதாகமம் சொல்லுகிறபடியால், பெந்தெகொஸ்தே நாள் கூட்டத்தாருடைய இருதயம் குத்தப்பட்டது போல இவனுடைய இருதயமும் குத்தப்பட்டிருக்கிறது என்று நாம் நம்ப இடமுண்டு. ஆனாலும், இவன் முடிவெடுக்கத் தாமதித்தான். வேறொரு சமயத்திற்காக காத்திருந்தான். விளைவு, நித்திய அழிவு. ஆம், இவன் மீண்டும் மனம் மாறினான் என்று வேதாகமம் எங்குமே சொல்லுவதில்லை.

வாய்ப்பும், சமயமும் நம்முடைய வாழ்க்கையில் நேரும்போது அவைகளை நாம் ஞானமாகப் பயன்படுத்தவேண்டும். அவைகளைத் தவறவிட்டு விடக் கூடாது. இதோ ஒரு உதாரணம், ராஜாக்களின் நாட்களில், சமாரியாவிற்கு விரோதமாக எழும்பின சீரியரை, தேவன் கலங்கப்பண்ணி, அவர்கள் பிராணன் தப்ப ஓடிப்போகும்படி செய்தார் என்ற செய்தியை தெரிந்து கொண்ட குஷ்டரோகிகள், "பின்பு அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி: நாம் செய்கிறது நியாயமல்ல, இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்! நாம் மவுனமாயிருந்து, **பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்**; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றார்கள்" (2. ராஜா.7;9). "பொழுது விடியுமட்டும் காத்திருந்தால், அதாவது தாமதித்தால் குற்றம் நம்மேல் சுமரும் என்று அவசரமாகச் செயல்படுகிறார்கள்.

யார் இந்த குஷ்டரோகிகள்? சமாரியாவின் ராஜாவாலும், சமாரியாவின் ஜனங்களாலும் ஒதுக்கி வைக்கப்பட்டவர்கள். அவர்களால் நேசிக்கப்படாதவர்கள். அவர்களுக்குக் கடன்படாதவர்கள். ஆனால், அவர்களே, தாமதித்தால் குற்றம் நம்மேல் சுமரும் என்று எண்ணி செயல்பட்டார்கள். நம்முடைய நிலையை அவர்களோடு ஒப்பிட்டுப் பாருங்கள். நாம் தேவனால் குறைவில்லாமல் படைக்கப்பட்டு, நமக்காக அவர் தமது சொந்தக் குமாரனையே கொடுக்குமளவு நேசிக்கப்படுபவர்கள். அவரை அறியவும், ஏற்றுக் கொள்ளவும், உபதேசத்திற்குக் கட்டுப்படவும் கடன்பட்டவர்கள். ஆனால், நாம் என்ன செய்துகொண்டுள்ளோம்? தேவனண்டையில் சேர்வதற்கும், ஆவிக்குரிய வாழ்வின் அலங்கோலங்களைச் சீர் செய்வதற்கும் நாம் புதிய ஆண்டு வரை காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். குற்றத்திற்கான தண்டனை நித்தியமானதாக இருக்கக் கூடும். ஆகவே, இந்த குஷ்ட ரோகிகள் போல உடனடியாக செயல்படுவோம். தாமதம் வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

## III. தீமோத்தேயுபோல் அழைப்பை ஏற்றுக்கொள்வோம்

இப்பகுதியிலிருந்து, நம்மால் கற்றுக் கொள்ளக் கூடிய அடுத்த காரியம், தீமோத்தேயு பவுலின் அழைப்பை ஏற்றுக் கொண்டது போல், நாமும் தேவனுடைய, இயேசுவினுடைய அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது.

நான் ஏற்கனவே சொன்னது போல், உத்தம குமாரனாகிய தீமோத்தேயு பவுலின் அழைப்பை ஏற்று, சீக்கிரமாய்ப் போய்ச் சேர்ந்து, அவருக்குப் பணிவிடை செய்து, தன் கடமையை நிறைவேற்றியிருப்பான் என்று நம்ப நிறைய வாய்ப்புண்டு என்று. நாம் அப்படியே எண்ணிக் கொள்வோம்.

நாமும், நம்முடைய பிதாவாகிய தேவனாலும், இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவினாலும் பரிசுத்த ஆவியானவராலும், மணவாட்டியாகிய சபையாலும் அழைக்கப்படுகிறோம். ஏசாயா தீர்க்கனைக் கொண்டு தேவன் சொல்லுவதைக் கேளுங்கள். **"யாக்கோபின் வம்சத்தாரே, கர்த்தரின் வெளிச்சத்திலே நடப்போம் வாருங்கள்"** என்றும் **ஓ, தாகமாயிருக்கிறவர்களே நீங்களெல்லாரும் தண்ணீர் களண்டைக்கு வாருங்கள்"** என்றும் அழைக்கிறார் (ஏசா. 2;5 55;1). நம்முடைய இரட்சகரும், **"வருத்தப்பட்டுப் பாரஞ் சுமக்கிறவர்களே! நீங்களெல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்"** என்று அழைக்கிறார் (மத்.11; 28). இன்னும் வெளிப்படுத்தல் 22;17-ல் **"ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்"** என்று பார்க்கிறோம்.

இவ்வசனங்களெல்லாம் நமக்குச் சொல்லுவது என்ன? நம் எல்லோருக்குமே அழைப்பு உண்டு என்பது. ஆனால், நாம் நம்முடைய வாழ்க்கையில், இதுவரைக்கும் வந்த அழைப்பை ஏற்றிருக்கிறோமோ? இல்லை என்பது உங்கள் பதிலாக இருக்குமானால் இப்படிப்பட்ட அழைப்பை ஏற்க இன்னும் தாமதம் ஏன்? நீங்கள் மெய்யான தேவனை ஏற்றுக் கொள்ளமாட்டீர்களா? பிரச்சினைக்குரிய மாரிகாலம் வந்துவிட்டால், நீங்கள் விரும்பினாலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பது இன்னும் உங்களுக்கு ஏன் விளங்கவில்லை? விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாம், ஒரு காலத்தில் "நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா" என்று அழைக்கப்பட்டபோது, அழைப்பை ஏற்று, கீழ்ப்படிந்து, இம்மைக்குரிய ஆசீர்வாதத்தையும், மறுமைக்குரிய ஆசீர்வாதத்தையும் பெற்றுக் கொண்டான் என்பது உங்களுக்குத் தெரியாதா? பிறகு ஏன் தாமதம்? இன்னும், புதிய ஏற்பாட்டில், நம்மைப் போலவே பாவங்களும், பாடுகளும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்த சகேயு, இயேசுவின் அழைப்பை ஏற்றுக் கீழ்ப்படிந்து, இரட்சிப்படைந்து, ஆபிரகாம் குமாரனானதை நீங்கள் அறியவில்லையா? (லூக்.19;1-9) அறிவீர்கள் தானே. அப்புறம் ஏன் தாமதம்? வேண்டாம், தயவு செய்து தாமதம் வேண்டாம். அழைப்பை ஏற்றுக் கொள்ளுவோம்.

ஒருவேளை, உங்களுடைய பதில், நான் ஏற்கனவே அழைப்பை ஏற்றுக்கொண்டேன் என்பதாகவே இருக்குமானால், அந்த அழைப்பை உண்மையான முறையில் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா, என்பதை சோதித்துப் பாருங்கள். நான் மிகுந்த அர்த்தத்தோடு இவ்வார்த்தைகளைச் சொல்லுகிறேன். புகழ்பெற்ற மலைப் பிரசங்கத்தில், நம்முடைய இரட்சகராகிய இயேசுக் கிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் கித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்று அழுத்தம் திருத்தமாகச் சொல்லுகிறார் (மத்.7;21)

நமது ஆண்டவர் ஏன் இப்படிச் சொல்லியிருக்கிறார் என்பதை நீங்கள் ஆராய்ந்து பார்க்கத் தவறி விடாதீர்கள். ஒருவேளை, நாம் இதுகாறும், கிறிஸ்தவன் என்ற போர்வையில் ஒளிந்து கொண்டிருக்கிறேன். ஆனால், என்னுடைய நம்பிக்கை, விசுவாசம், மனமாற்றம், அறிக்கை, ஞானஸ்நானம், சபை, ஆராதனை, இவை அனைத்தும் பிதாவின் சித்தப்படி இருக்கிறதா என்று சீர்தூக்கிப் பாருங்கள். கேட்டுக்குப் போகிற வழி விசாலமாயிருக்கிறபடியால் (மத்.7; 14) அதிலே அநேகர் பிரவேசிப்பார்கள். அதிலே, நீங்களும் ஒருவராக மாறிவிடாதீர்கள். "எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக் கொள்ள இதுவே சரியான தருணம் (1. தெச.5; 21) உங்களுக்குத் தடையேற்படுத்தும் மாரிகாலம் வரை காத்திருக்க வேண்டாம். எதிர்த்து நின்று, இம்மையில் வேதனையையும், மறுமையில் நரக வேதனையையும் அடையவேண்டாம். பிதாவின் சித்தப்படி மாத்திரம் செய்வோம்.

எனக்கன்பானவர்களே, வருடக் கடைசியில் புத்தாண்டுக்கான ஆசீர்வாதங்கள் பற்றிப் பேசாமல் இப்படி எழுதுகிறேனே என்று குறைப்பட வேண்டாம். வெற்றான வாழ்த்துக்களாலும், போலியான வாக்குத்தத்தங்களாலும் ஏமாந்து போக வேண்டாம். மரியாள் போல், தேவையானதை, தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொள்வோம். நாம் அப்படிச் செய்யத் தீர்மானிக்கும்போது, மார்த்தாளைப் போல நம்மைக் குறை சொல்பவர்கள் இருப்பார்கள். நம் கூடவே இருப்பார்கள். ஆனால், மரியாள், இயேசுவால் மெச்சப்பட்டது போல, நாம் தேவ சித்தப்படியும், இயேசுவின் கட்டளைப்படியும், அப்போஸ்தலரின் உபதேசப்படியும், ஆதித் திருச்சபையாரின் ஒழுங்கின் படியாகவும் செய்யும்போது, பரலோகத்தின் தேவனாலும், அவருடைய குமாரனாகிய இயேசுக் கிறிஸ்துவாலும், அங்கீகரிக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவோம் என்பது திண்ணம்.

ஆகையால், இப்பேருண்மையை உணர்ந்தவர்களாய், நாம் தேவனண்டை போய்ச் சேருவதற்குத் தடையேற்படுத்தும் மாரிகாலம் வரை காத்திராமல், வருடக் கடைசியை ஒரு மாபெரும் வாய்ப்பாக எண்ணி, அழைப்பை ஏற்று, எந்த தாமதமும் செய்யாமல், கீழ்ப்படிந்து, கிறிஸ்துவண்டையிலும், அவருடைய ஒன்றான மெய்ச் சபையினிடமும் வந்து சேர்வோம். ஜீவிய காலமெல்லாம் அதில் நிலைத்திருப்போம். ஆமென்!

**செ. ராஜநாயகம்.**

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

**தி**ருமறை ஆசான் வாசகர்கள் அனைவருக்கும் அடியேனின் குடும்பத்தின் சார்பாக கனிவான புத்தாண்டு நல்வாழ்த்துக்கள். புதிய ஆண்டில், வேத சமாதானம் உங்களுடனிருப்பதாக!

**- ஆசிரியர்**

# மார்க்க சம்பந்தமான தவறுகளை கண்டிக்க வேண்டும்.

இன்றைய உலகில் அநேக மதங்கள் உண்டு, சிலர் அவைகள் எல்லாம் பரலோகத்திற்கு கொண்டு சேர்க்கும் வெவ்வேறு விதமான வழிகள் தான் என்று கூறுவார்கள். இந்த கூற்று உண்மையானால், அது எவ்வளவு அருமையாக இருக்கும்? நாம் எல்லா மதத்தினரும் இரட்சிக்கப்படுவார்கள் என்று சொல்ல முடியும். ஆனால், எல்லா நேர்மையோடு நாம் அப்படி ஒருபோதும் சொல்லமுடியாது! ஏன்? ஏனென்றால், பரலோகத்தில் நமக்கு ஒரே தேவன் தான் இருக்கிறார், மற்றும் நம்மை இரட்சிக்கும்படியாக நமக்காக தன் ஜீவனை விட்ட ஒரே இரட்சகர் தான் நமக்கு இருக்கிறார். அவர் தேவ குமாரனான இயேசு கிறிஸ்துவே, அவர் இந்த உலகத்திற்கு கொண்டு வந்தது ஒரே உண்மையான மார்க்கமான கிறிஸ்தவமே.

ஆனால் கவனியுங்கள்! கிறிஸ்தவத்திலும் நாங்கள் கர்த்தரை பின்பற்றுகிறோம் என்று சொல்லும் அநேக பிரிவுகள் உண்டு. சிலர் இந்த கூட்டத்தாருக்கு இருக்கும் ஆர்வத்தையும், தியாக சேவையையும் பரலோகத்திற்கு போக வேண்டும் என்ற வாஞ்சையையும் கண்டு அதன் அடிப்படையில் அவர்கள் செய்யும் சில நல்ல காரியங்களை சுட்டிக் காட்டுவார்கள். ஆனால், நாமோ கிறிஸ்துவின் நாட்களுக்குச் சென்று, அவர் எப்படி மார்க்கப் பிரிவினைகள், மாறுபட்ட கொள்கைகள், தன் போதனையை கேட்கிறவர்களிடத்தில் மாய்மாலம் போன்றவைகளை எப்படி கையாண்டார் என்று பார்ப்பது அவசியம். அவர் எல்லா மார்க்க பிரிவினைகள் நடத்தும் ஊக்கப்படுத்தினாரா? அவர் அப்படி செய்யவில்லை என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். அதற்கு மாறாக அவர்களுடைய தவறுகளை வெளிப்படையாக சுட்டிக் காட்டினார், அவர்களுடைய போதனையை சாடினார். இதை முழுமையாக நீங்கள் புரிந்து கொள்ள மத்தேயு 23ம் அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள்.

இயேசு சொன்னார், "மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப் போடுகிறீர்கள். நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிரவேசிக்க விடுகிறதுமில்லை. மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணி, விதவைகளின் வீடுகளைப் பட்சித்துப் போடுகிறீர்கள்; இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள். மாயக்காரராகிய வேதபாரகேர! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தனாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள்; அவன் உங்கள் மார்க்கத்தானானபோது

அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். "(மத்.23;13-15). மீண்டும் கிறிஸ்து கூறுகையில் "மத்.24:5ல் ஏனெனில் அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். "இது உங்களுக்குப் போதுமானதாக இல்லை என்றால், நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளைக் கவனியுங்கள். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானயேல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி; கர்த்தாவே! கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்.7; 21-23). நமது ஆண்டவர் இந்த ஜனங்களைப் பற்றி ஏன் இப்படிச் சொன்னார்? அவர்கள் பக்தியாகவும், உண்மையாக அல்லவா இருந்தார்கள்? அவர்கள் தேவ சித்தத்தை செய்யும்படிதானே நாடினார்கள்? ஆம், ஆனாலும் அவர்கள் தவறு செய்தார்கள், தங்களை கேட்கிறவர்களை வஞ்சித்தார்கள், அவர்களை தவறான பாதையில் நடத்தினார்கள், இதை ஆண்டவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, ஆகவே தான் இப்படி கடுமையாக சாட்டை அடி கொடுக்கிறார்.

அப்போஸ்தலனாகிய பவுல் அவர் நாட்களில் இருந்த கள்ள போதகர்களை எப்படி கையாண்டார்? அவர் அவர்களை ஏற்றுக்கொண்டாரா, அவர்களோடு தொடர்பு வைத்துக் கொண்டாரா, அவர்களது போதனையை சரி என்று சொன்னாரா, அல்லது என்ன செய்தார்? பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது, " வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்" (கலா.1; 7-9).

கொரிந்து பட்டணத்து கிறிஸ்தவர்களிடம் அவர் பணிவாக எடுத்துச் சொல்லும்போது, "சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய

இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" என்கிறார். (1கொரி 1:10) அவர், ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதுகையில், "அன்றியும் சகோதரரே, நீங்கள் கற்றுக் கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து, அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்" (ரோமர்.16; 17, 18).

கிறிஸ்துவும், பவுலும், மற்ற அப்போஸ்தலர்களும், அவர்களுடைய நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களும், தவறு செய்தவர்களை கண்டிப்பதில் சந்தோஷப்பட்டார்களா? "உங்களை விட நான் பரிசுத்தவான்" என்ற மனோபாவம் அவர்களிடமிருந்ததா? யாரையாவது குற்றம் பிடிக்க வேண்டும், கண்டனம் பண்ண வேண்டும்? என்பதையே வேலையாக கொண்டார்களா? இல்லை, மனிதனுக்குள்ளாக இருக்கும் ஆத்துமாவை அவர்கள் நேசித்தார்கள். கிறிஸ்து சர்வ லோகத்தின் பாவத்திற்காக மரித்தார், பவுலுக்கும் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாக மரித்தார் - ஆனால் அதே

## வெளிப்படுத்தின விசேஷத்தில் நடக்கும் என்று சொல்லப்பட்ட எல்லாம் இக்காலத்துக்கு பொருந்துமா?

**க**வனமாய் படியுங்கள், ஏறக்குறைய **550** கி.மு. வில் தானியேலுக்கு காண்பிக்கப்பட்ட தரிசனம், சுமார் **386** ஆண்டுகள் கழித்து நிறைவேறின. (உதாரணமாக. யூதா மேகபீஸ் **165–166** கி.மு.). இந்த காரியத்தையே தேவன், இவைகள் நடக்க இன்னும் காலம் செல்லும் அதை முத்திரை போடு என்கிறார். (தானி 8:26; 12:4)

வெளிப்படுத்தலில் பார்க்கும் போது யோவானைப் பார்த்து புத்தகம் எழுதப்பட்டு முடிந்த தருணத்தில் இதை முத்திரை போடாதே. இவைகள் நடக்க காலம் சமீபம் என்கிறார். (வெளி 22:10)

ஆகையால் **386** வருடங்களுக்கு பின் நடப்பவைகளையே முத்திரைப் போடு என்று சொல்லும் தேவன், **2000** வருடத்திற்கு பின் நடப்பவைகளாக இருந்தால் முத்திரை போடாதே' நிறைவேற காலம் சமீபம் என்பாரா. எனவே வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்டவைகள் எல்லாமே இப்பொழுது நடக்க வேண்டியவைகள் தான் என்பது வேதத்திற்கு புறம்பானது.

சமயம், மனிதன் பாவத்திலிருக்கும்போது, தவறு செய்யும்போது, கள்ள போதனைகளை செய்யும் போது இரட்சிக்கப்பட முடியாது என்று நன்றாகவே அறிந்திருந்தனர். தவறை பின்பற்றுவது அவர்களையும், அவர்கள் சொல்லுவதைக் கேட்டு வஞ்சிக்கப்பட்டவர்களையும் அல்லது தவறான பாதையில் நடத்தப்பட்டவர்களையும் இரட்சிக்காது.

அதைப்போலவே, இவ்வுலகில் தாங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறோம் என்று பறைசாற்றும் அநேக பிரிவினை கூட்டங்கள் இன்றைக்கும் உண்டு. அவர்கள் எல்லாரும் நல்லவர்கள் என்பதில் சந்தேகமில்லை. தங்கள் ஜீவியத்தை ஆண்டவருக்காக கொடுக்கிறார்கள். அவர்கள் கடின உழைப்பாளிகள், ஆனாலும் தேவனுடைய வார்த்தையில் இடம்பெறாத அநேக காரியங்களை அவர்கள் நம்பி, அதை நடத்துகிறார்கள். அவைகளில் சில யாதெனில், விசுவாசத்தினால் மட்டும் இரட்சிக்கப்படுகிறோம், எல்லா சபைகளும் நல்ல சபைகள்தான், கிறிஸ்துவின் பெயரை சூட்டிக் கொள்வது முக்கியமானதல்ல, நீங்கள் நல்லவராக இருக்கும்வரை எதை விசுவாசிக்கிறோம் என்பது முக்கியமானதல்ல, என்பவைகள். மார்க்க விஷயங்களில் தேவனே முழு அதிகாரமுடையவர் என்றும் மனிதன் கீழ்ப்படிவதைத் தவிர தேர்ந்தெடுப்பதற்கு வேறு ஒன்றுமில்லை என்றும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே, அவர்களுடைய கீழ்படியாமையையும் அவர்கள் தங்களுக்குள்ளே தனி கூட்டங்களை உருவாக்குவதையும் தங்கள் சொந்த சபையை உருவாக்குவதையும் நாம் கண்டும் காணாதிருக்கலாமா!

அவர்களை தேவஜனமென்று ஏற்றுக் கொண்டு அவர்களோடு சேர்ந்து பணி செய்யலாமா? நாம் அப்படிச் செய்யலாமா? கள்ள போதகர்களைப் பற்றி அதிகம் எடுத்துரைப்பதினால் நாங்கள் மட்டும்தான் பரலோகம் செல்கிறோம் என்று நினைக்கிற மார்க்க சீமான்கள் இவர்கள் என்ற குற்றச்சாட்டு எங்கள் மேல் உண்டு. அதற்கு பயந்து, எங்கள் ஆண்டவர் தன் வார்த்தைகளில் எழுதி கொடுத்த சத்தியத்தை நாங்கள் பிரதிபலிக்காமலிருக்கலாகாது. அவரே சத்தியத்தை சமரசம் செய்யாமல், அதற்காக துன்பப்பட்டு மரித்தார். அப்போஸ்தலர்களும் அந்த வழி இடுக்கமானது என்று போதித்து அதற்காக தங்கள் ஜீவனை கொடுத்தார்கள். அடுத்து வந்த நூற்றாண்டுகளிலும் வாழ்ந்த கிறிஸ்தவர்களும் சத்தியத்தை பேசியதற்காக துன்புறுத்தப்பட்டார்கள். ஆனால் அதற்கு தீர்வாக எதிரியோடு சேரமுடியாது. அது நம்மையும், அவர்களையும் இரட்சிக்காது. நம்மில் யாராவது இரட்சிக்கப்படவேண்டுமென்றால் - அதுவும் தேவ கிருபையினால் இரட்சிக்கப்படவேண்டுமென்றால் - நாம் சொல்கிறதிலும் செய்கிறதிலும் ஆண்டவருக்கு உண்மையாய் இருக்க வேண்டும்.

**J.C. Choate** **J.C. சோட்.**

# "குடும்பங்களின் இன்றைய அத்தியாவசியத் தேவைகள்"

முதலாம் நூற்றாண்டில் நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து பரிசுத்தமான விருந்தாளியாக பல வீடுகளுக்குச் சென்றுள்ளார். அவர் சென்ற எல்லா வீடுகளுமே தேவையில் இருந்தது, தேவகுமாரன் அந்தத் தேவைகளை சந்தித்தார். அதே இயேசு கிறிஸ்து இன்றைக்கு நம்முடைய சுகவீனம், பிரச்சினைகள், தீர்வுகள் போன்றவற்றிற்கும் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார். உண்மைச் சூழ்நிலை என்னவெனில், எல்லா குடும்பங்களுமே பற்பல தேவைகளில் இருக்கிறது. ஆனால் குடும்பங்களுக்கு குடும்பம் தேவைகள் வித்தியாசப்பட்டிருக்கிறது. இது எப்படி உண்மையெனில், சில குடும்பங்கள் இயேசு கிறிஸ்துவை மையமாக வைத்து அவரைச் சுற்றி தங்கள் காரியங்களை மேற்கொள்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் குடும்பத்தில் இயேசுவை வெளியே ஒதுக்கி வைத்து விட்டு தங்கள் விருப்பம்போல் வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

என்னுடைய திட்டமான வலியுறுத்தல் யாதெனில், இன்றைக்கு நாம் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளுக்கு விடுதலை இயேசுவின் மூலம் மட்டுமே கிடைக்கும். அழகான அந்த ஏதேன் தோட்டத்தில் பிதாவாகிய தேவன் திருமணம் (குடும்பம்) என்பதை ஸ்தாபித்து வைத்தார். அக்குடும்பத்துக்கு தேவையான மகிழ்ச்சியை தேவன் தெரிந்து வைத்திருந்தார்.

இப்போது நம் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள இன்றைய குடும்பங்களின் அத்தியாவசியத் தேவைகள் என்னவென்பதைப் பற்றிக் காண்போம்.

## "அன்பு, துணை" - இன்றைய தேவை

கணவன், மனைவி ஆகிய இருவருக்குள்ளும் அதிக அன்பும், உறுதுணையும் தேவையாயிருக்கிறதல்லவா? இன்றைக்கு அதிக அளவு குடும்பங்கள் சீரழிகிறதென்றால் இந்த அன்பும் உறுதுணையும் இல்லாததே காரணம். இயேசுவையும், அவர் சொன்ன உபதேசங்களையும் ஓர் அர்ப்பணிப்பு உணர்வுடன் சார்ந்திருந்தால்தான் இரண்டையும் பெற்றுக் கொள்ளமுடியும். பரலோக மைந்தனை உங்களுடைய குடும்பத்தில் ஒரு மாலுமியாக ஏற்றுக் கொள்ளாவிட்டால் நாம் ஒருபோதும் பரலோகம் செல்லவே முடியாது. இப்பூலோகத்தின் சொர்க்கமாக திகழ்ந்த ஏதேன். தோட்டத்தில் சிருஷ்டிகர்த்தவாகிய நம்முடைய தகப்பன் ஆராய்ந்து மனிதன் தனிமையாய் இருப்பதை கவனித்து அது நல்லதல்ல என்கிறார். துணை வேண்டும் என்று நினைத்தார். மோசேயானவன் எழுதும்போது "மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" ஏற்ற துணையை உண்டாக்குவேன் என்றார்" என்கிறான் (ஆதி.2;18).

ஆசையாய் உருவாக்கப்பட்ட அந்த துணை, ஆதாமின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக உருவாக்கப்பட்டாள். பெண் உருவாக்கப்பட்ட அந்த அழகான, அற்புதமான விதத்தை வர்ணிக்கும் வகையில் மோசே அதை இவ்வாறு விவரிக்கிறான் "அயர்ந்த நித்திரையை, வருவித்து விலாவிலிருந்து எலும்பை எடுத்து, அதிலிருந்து பெண்ணை உருவாக்கி அவளை ஆதாமிடம் கொடுத்தார், உடனே ஆதாம் இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமும் என்கிறான் (ஆதி.2;21-24).

ஆனால், பிதா எதிர்பார்த்தபடி இல்லாமல் இந்த அன்பும், துணையும் மாறி, வெறுப்பு, பிரிவினை என்பது பாவத்தினால் வந்து சேர்ந்தது. (உபா. 24;1-4) வசனப் பகுதிகளில் கணவன், மனைவி பிரிந்தால் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆதியாகமம் தொடங்கி மல்கியா வரை லட்சக்கணக்கான இஸ்ரவேல் ஜனங்களின் சரித்திரத்தை பார்க்கும்போது கணவன், மனைவி அன்பு கெட்டு, பிரிவினை துரோகம் ஏற்பட்டு விட்டது. தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு கடுமையாக எச்சரித்துக் கொண்டே வந்தார் மல்.2; 14-16 வாசிக்கும் போது தன் இளவயதின் மனைவிக்கு துரோகம் பண்ணாதிருங்கள் என்று எச்சரிக்கிறார். புதிய ஏற்பாட்டில் கணவன் தன் வீட்டை விட்டு பிரிந்து தன் மனைவியோடு இசைந்திருக்கவேண்டும் என்று தேவன் சொல்கிறார். (மத்.19; 4-6). "புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்தார்" (எபே. 5; 25) புருஷர்களும், மனைவிகளை தங்கள் சொந்த சரீரங்களாக பாவித்து அன்புகூறவேண்டும் (எபே.5;28) புருஷர்களே உங்கள் மனைவிக்கு செய்ய வேண்டிய கனத்தை செய்யுங்கள் என்று 1பேதுரு.3;7-ல் கூறுகிறார். **வாழ்க்கை என்னுடையதல்ல, நம்முடையது என்ற தத்துவத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.** கிறிஸ்து, கணவன், மனைவி என்ற மூன்று கோடுகளும், ஒரு முக்கோணம் என்றால், மேல்கோணம் கிறிஸ்துவாகவும், கீழ் இரண்டு கோணங்களும் கணவனும் மனைவியுமாக இருந்தால் அதுதான் விசேஷமானது.

## புனிதம், மெய்ப்பற்று- இன்றைய தேவை

ஒழுக்கம் கெட்டு, ஒழுக்கத்தை செயல்படுத்துவது இயலாது என்ற நிலையில் இன்றைய் நாட்கள் உள்ளது. ஒரு பெண்ணோ பையனோ தன் வாலிபத்தை அடையாததற்கு முன்பு கீழ்க்கண்ட வசனங்களை தங்கள் சிந்தையில் கொள்ள வேண்டும். இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் தேவனை தரிசிப்பார்கள். (மத்.5;27, 28) இயேசுக்கிறிஸ்து விபச்சாரத்தையும், வேசித்தனத்தையும் ஆரம்பத்திலேயே அடியோடு அறுக்க சொல்லுகிறார். (மாற்கு.7;20-23)ல் மனுஷனை தீட்டுப்படுத்துவது வேசித்தனம் விபச்சாரம் என்கிறார். 1. கொரி.6;18-20-ல் வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள் என்கிறார். கலாத்தியர்.5;19-21-ல் விபச்சாரம், வேசித்தனம் மாம்சத்தின் கிரியைகள் என்கிறார். "பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்" (1. தெச.5;22)-ல் கூறுகிறார். நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகி மோக இச்சைக்குட்படாமல், தன் தன் சரீர பாண்டத்தை பரிசுத்தமாயும், கனமாயும்

ஆண்டுகொள்ளும்படி அறிந்து இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன் சகோதரனை வஞ்சியாமலும் இருக்க வேண்டும். கர்த்தர் நீதியை சரிகட்டுகிறவராயிருக்கிறார். (1.தெச.4; 3-7). என்கிறார்.

## பெற்றோர்கள் பிள்ளைகள் இவர்களுக்கிடையே அன்பு, துணை எவ்வாறு இருக்கிறது!

பெற்றோர்கள் கிறிஸ்தவ அன்பை பிள்ளைகளுக்கு காட்ட வேண்டும். பிள்ளைகளுக்காக பிள்ளைகளுடன் இருந்து வாழ வேண்டும். பிள்ளைகள் குடும்பத்தை ஆளுகை செய்யாமல், பெற்றோர்கள் பிள்ளைகளை ஆளுகை செய்யவேண்டும். இது வேதாகமத்தின் கட்டளை. பிள்ளைகளின் தேவைகளை அன்போடு பூர்த்தி செய்ய வேண்டும். நீ பிள்ளையாயிருந்தால், இப்போது பெரியவனாகி தனி குடும்பமாய் இருந்தால், நீ எத்தனை முறை உன் பெற்றோரை போய் பார்த்திருக்கிறாய்? எத்தனை முறை பேசியிருக்கிறாய்? அருகாமையில் இருந்தால், கடைசியாக நீ போய் உன் பெற்றோரைப் பார்த்து பேசி, அவர்கள் தேவைகளை சந்தித்து எவ்வளவு நாள் ஆயிற்று? "இதோ, இன்று நான் பூலோகத்தார் யாவரும் போகிற வழியே போகிறேன்" என்று யோசுவா.23;14-ல் கூறியபடி உங்கள் பெற்றோர்கள் போகிறதற்குள்ளாக போய் கவனிக்காதபடி உங்கள் அலுவல்கள், நண்பர்கள் காரணமாயிருக்கிறார்களா? நிறைய பிள்ளைகள் தங்கள் பெற்றோர் கண்ணை மூடிய பிறகு அவர்கள் அன்பு, துணை இவற்றைப் பற்றி பெரிதாகப் பேசுவார்கள். பரிசுத்த ஆவியானவர் இதைப்பற்றி வேதாகமத்தில் எழுதிக் கொடுக்கவில்லையா (எபே. 6; 1-2). தாமதமின்றி அவரின் போதனைப்படி நடப்போம். இயேசு கிறிஸ்து நம் அன்பும், துணையும் பலப்படவுமே இவ்வுலகிற்கு வந்தார்.

பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்போது பாலிய ஸ்திரீகளை எல்லாக் கற்புடன் கூடிய சகோதரிகளைப் போலவும், பாவித்து, புத்தி சொல்லு" (2.தீமோ 5;2) என்கிறார். 1. தீமோ.5;22ன் சட்டமே "உன்னை சுத்தவனாகக் காத்துக் கொள்" என்பதுதான். பால் சம்பந்தப்பட்ட உறவு என்பது, திருமணம் சம்பந்தப்பட்ட ஒன்றாகத்தான் இருக்க வேண்டும். இந்த உறவு வேறு எந்த வகையில் கிடைத்தாலும் அது (பா-வ-ம்) என்ற மூன்றெழுத்திற்குள் அடங்கியே தீரும். குடும்பத்தின் பிரச்சினையென்னவெனில் இந்த பாவத்தை கணவன், மனைவி இதில் யாராவது ஒருவர் செய்வதின் காரணம்தான். இயேசு இதைப் பற்றி கூறும்போது வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியை தள்ளிவிடக் கூடாது என்கிறார். (மத்.5; 32). மத்.19; 9-லும் இதே காரியத்தை இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார். நீதி.9;17-யை நாம் வாசிக்கையில் சாத்தான் கூறுகிற அறிவுரைகளை கேட்கக் கூடாது என்று ஞானி புத்தி சொல்லுகிறான். திருமணத்தின் மெய்பற்று புனிதத் தன்மை இவற்றிற்கு கிறிஸ்து அதிகாரியாக இருக்கிறார். எனவே கிறிஸ்துவின் உபதேசத்தை பின்பற்றுவோம்.

## மன்னித்தல், தயவு, இரக்கம், கரிசனை இன்றைய தேவை:-

குடும்பமாயிருந்தாலும், சபையாயிருந்தாலும் மன்னித்தல் என்பது மிக அவசியம். மனுஷனுடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரம பிதா உங்களுக்கும் மன்னிப்பார்.

மன்னியாதிருந்தால் உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார் (மத்.6;14,15). ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (கொலோ.3;13). கொலோசே பட்டணத்து மக்கள், குடும்ப சூழல், குடும்ப உறவு நிலைகளின் மத்தியில் வாழ்ந்தவர்கள். பவுல் மனைவிகளுக்கும், கணவர்களுக்கும், பெற்றோருக்கும் கூறுவதைப் பாருங்கள். மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூறுங்கள். அவர்கள்மேல் கசந்து கொள்ளாதிருங்கள். பிள்ளைகளே, உங்கள் பெற்றோருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள். இது கர்த்தருக்குப் பிரியமானது. பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்று போகாதபடி அவர்களுக்கு கோபமூட்டாதிருங்கள் கொலோ.3;18-21).

மன்னிப்பு என்பது ஒன்று, இரண்டு, மூன்று முறை அல்ல. பேதுரு ஏழுமுறை போதும் என்று நினைத்தபோது, இயேசு கிறிஸ்து ஏழெழுபது முறை (மத்.18;22) என்கிறார். இயேசுக் கிறிஸ்து மத்.17;4-ல் ஒருநாளில் ஏழுதரம் உனக்கு விரோதமாய் குற்றஞ் செய்து ஏழுதரமும் உன்னிடத்தில் வந்து, நான் மனஸ்தாபப்படுகிறேன் என்று சொன்னால், அவனுக்கு மன்னிப்பாயாக என்றார். இயேசுவைப் பின்பற்றும்போது நம் இருதயம் இளகி மென்மைத்தன்மையை அடைகிறது. இது இன்றையத் தேவைதான், அன்பான வார்த்தை தயவை ஏற்படுத்துகிறது. இதைப் பற்றி வேதம் கூறும்போது, ஒருவருக்கொருவர் தயவாயும் (எபே. 4;32) இருங்கள் என்கிறது. தங்க சட்டம் என்று போற்றப்படுகிற மத்.7;12-லும் இதையே நாம் வாசிக்கிறோம். மற்றவர்கள் நம்மீது தயவு, அன்பு, மன்னிப்பு இவைகளை காட்ட வேண்டும் என்று எதிர்பார்க்கும்போது நாம் இவைகளை முந்தி அவர்களுக்கு காட்ட வேண்டும்.

இரக்கமும், கரிசனையும் இன்றைய குடும்பங்களின தேவையாயிருக்கிறது. இது ஏதோ கடையில் வாங்கும் பொருள்கள் அல்ல. குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் இதை நடைமுறைப்படுத்த வேண்டும். அப்போது தான் பரலோகத்தின் தேவனும், இயேசு கிறிஸ்துவும் நம்முடைய குடும்பத்திற்கு ஆசீர்வாதத்தையும் இரக்கத்தையும் கட்டளையிடுவார். அப்பொழுது தான் புதிய ஆண்டு நமக்கு சமாதானம் நிறைந்ததாக இருக்கும்.

**ரேச்சல் ராஜ நாயகம்.**

### வெளிப்படுத்தின விஷேசத்தில் எண் -12ன் முக்கியத்துவம்.

1. **எண் 12,** தேவத்துவத்தின் எண்ணாகிய மூன்றையும், மனுக்குலத்தின் எண்ணாகிய நான்கையும் பெருக்குவதால் கிடைக்கும் எண்ணாகும்.
2. எபிரேய எண் கணிதத்தின்படி 12 என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட மார்க்கத்திற்கான எண்.
3. இஸ்ரவேலின் கோத்திரங்கள் 12, 12 அப்போஸ்தலர்கள்

# நீங்கள் கவலைப்படுகிறதென்ன?

அநாதி தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆதரையின் மண்ணைக் கொண்டு வனையப்பட்ட ஆதிமனிதனாகிய ஆதாம் முதல், குவலயத்தில் குழந்தையாக பிறக்கிற ஒவ்வொரு மனிதனும் கவலை என்னும் இக்கடுவலைக்கு தப்பினதேயில்லை, பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களுக்கு காலையும், மாலையும் புத்தக மூட்டையை சுமக்க வேண்டுமே, வீட்டுப் பாடங்கள் முடிக்க வேண்டுமே, தேர்வு காலங்களில், வினாத்தாளின் கேள்விகள் எளிதாக இருக்க வேண்டுமே, பரீட்சையில் தேர்ச்சி பெற வேண்டுமே என்கிற கவலைகள், ஏழைகளுக்கு அன்றாடம் பிழைப்புக்காவது கூலி கிடைக்க வேண்டுமே என்கிற கவலை, செம்படவனுக்கு, கடலில் கடும் தவமிருந்து தொழில் செய்தால், சந்தையில் மீன்கள் நல்ல விலைக்கு விற்க வேண்டுமே என்கிற கவலை. வயதாகி விருத்தாப்பியம் வந்த பிறகு, நம் பிள்ளைகள் சரியாக கவனிக்கவில்லையே என்கிற கவலை முதியோருக்கு, வாலிபர்களுக்கு எதிர்கால கனவுகள் எல்லாம் நிகழ்வாக வேண்டுமே என்ற கவலை, இப்படி பலர், பற்பல விதமாக கவலை கொள்வர். இதுவே இவ்வுலகின் நடப்பு.

இறைவன் இத்தரணி மீது தன்னலமற்ற அன்பு கொண்டார் என்பதை எண்மிக்க வந்தார் இறைமகன் இயேசு. சீடர்க்கெல்லாம் அறிவுரை கூற எண்ணிக் குன்றின்மேல் ஏறி நின்ற குணக்குன்றாம் இயேசு நாதர், ஆவிக்குரிய விஷயங்களில் கூனிக்குறுகி நின்ற குவலய மக்களை நேர்கொண்ட பார்வை உடையவர்களாக்கும்படி மலைப் பொழிவு செய்தார். அப்படி அவர் முழங்குகையில், என்னத்தை உண்போம், உடுப்போம் என்று எண்ணித் தினமும் ஏங்குதல் வேண்டாம். அழகே உருவாக ஆடைகள் அணிந்த சாலொமோனும் கூடத் தாரணியில் தனிமலர் போல் உயர்வாய் உடுத்தியதில்லை. ஆகையால் நீங்கள், "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும் (மத்:6;33) என்றார்.

## அப்போஸ்தலர்களின் ஆலோசனை

நமது வாழ்க்கையில் துன்பங்கள் வரும் போது அல்லது ஒரு முக்கியமான முடிவு எடுக்கும் வேளை நெருங்கும் போது அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்க ஓடுவோம். நமக்கு அதுவரை வந்திராத வியாதி வரும் போது, முன்னமே அந்த நோயின் தன்மை அறிந்த ஒருவரிடம் நாம் ஆலோசனை பெறுவது வழக்கம், அப்படி செய்வது சாலச் சிறந்தது தான் என்பதில் ஐயமில்லை. அது போலவே நாம் புரிந்து கொள்ள முடியாத அல்லது ஏன் எனக்கு மட்டும் இது? என்று நாம் கேட்கும்படியான காரியங்கள் நடக்கும்போது நம்மில் அநேகர் என்ன செய்வது என்று தெரியாமல் தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்ட மீனாகத் துடிக்கிறோம்.

வாலிபர்களே! நமக்காகவே தேவன் பவுலின் மூலமாக ஓர் அருமையான ஆலோசனையைத் தருகிறார். பிலிப்பிய சபையாருக்கு அவர் நிருபம் வடிக்கையில், "**நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல்,** எல்லாவற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் **தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்.** அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக் கொள்ளும் (பிலி.4;6-7) என்கிறார்.

இளைஞர்களே! ஏதாவது துயரம் நமக்கு நேரிட்டால், அந்த இக்கட்டிலிருந்து நம்மை விடுவிக்கக் கூடிய தோழனுக்கு, இனஜன பந்துகளுக்கு நாம் அதை தெரியப்படுத்துவோம். வாலிபர்களாகிய நாம், ஏதாவது உடல் நல குறைவு பட்டால் தாய் தந்தையிடம் தெரிவிப்போம். உடனே அவர்களும் தங்களாலானதைச் செய்வார்கள். ஆனால் இவர்கள் **எல்லோரையும் விட கோடாகோடி மடங்கு நம்மீது அன்பு வைத்திருக்கிற பரம பிதாவினிடத்திற்கு காரியங்களை தெரியப்படுத்த வேண்டும்** என்ற ஆலோசனையை நமக்குத் தருகிறார் பவுல். எப்படித் தெரியப்படுத்துவது? ஜெபம் என்கிற கவலை போக்கும் கருவியை நாம் பயன்படுத்தி அதன் மூலமாக நாம் அப்படிச் செய்ய வேண்டும். எனக்கன்பானவர்களே, சங்கீதக்காரன் அங்கலாய்ப்பதைபோல, நீங்களும் தவிக்கிறீர்களா? அவன் இப்படியாய்ப் புலம்புகிறான், ".....இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்" என்கிறான் (சங்6:6) அவன் படுத்திருக்கும் படுக்கை, அவன் சிந்திய கண்ணீர் மழையில் நனைந்து, ஈர மிகுதியில் கட்டிலே தண்ணீரில் ஊறுகிறது போன்ற காட்சியை நாம் கண் முன் நிறுத்துகிறான்.

எனக்கினியவர்களே! இரவும், பகலும் கண்ணீரே எனக்கு உணவாக இருக்கிறது. வருகின்ற புதுவருடமாவது நன்றாக இருக்குமா? என்று நெடுநாட்களாக காத்திருந்து இளைத்துப் போனீர்களோ! அப்போஸ்தலனாகிய பேதுரு கூறுவதை கவனியுங்கள், "**அவர் நம்மை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள்**" (2.பேதுரு.5;7) என்கிறார். நமது பரம பிதாவிடம், அப்பா "என் கண்ணீரை உமது துருத்தியில் வையும்" என்று (சங் 56;8) மன்றாடுவோம், அவர் பாதங்களை கண்ணீரால் நனைப்போம், நிச்சயம் இரங்குவார் தம்மிடத்தில் வருகிறவர்கள் அவர் ஒரு போதும் புறம்பே தள்ளமாட்டார். **நமது ஆண்டவராகிய இயேசுவுக்கும் கண்ணீர் சிந்துவது என்றால் என்னவென்பதை நிச்சயமாக அறிவார், ஏனென்றால் அவர் இப்பூமியில் இருக்கும் போது கண்ணீர் சிந்தினார், கண்ணீரோடு ஜெபித்தார் என்று வேதம் சொல்கிறது.** (யோவான்.11;35;எபி.5;7) நீங்கள் ஜெபிக்கும் போது அவர் உங்களை விசாரிப்பார். காத்திருக்கும் காலம் முடிந்து, ஜீவ விருட்சம் போன்ற காலம் நிச்சயம் மலரும். மருள வேண்டாம்.

"வெளிச்சம் உண்டாகக் கடவது" என்று ஆரம்பிக்கப்பட்ட சிருஷ்டிப்பின் நாள் முதல் எல்லாம் முடியும் நாள் வரை, வையத்து மாந்தருக்கு வெளிப்படுத்தப்பட்ட பிரசங்கங்களில் அல்லது வெளிப்படபோகிற போதனைகளில், இமயமாக திகழும் மலைப்பிரசங்கத்தில் நமது ஆண்டவர் கூறும்போது, உணவுக்காகவும், உடைக்காகவும், உங்கள் ஊன்வருத்தி கவலைப்பட்டால், அதில் ஒரு அங்குலத்தையாவது கூட்ட முடியுமா? என்கிற கேள்வியை கேட்கிறார். பறக்கும், பறவைகளை பார்த்தீர்களா, ஆதவன் உதிக்கும் நேரம் மலர்ந்து, இளம்பரிதி பூமியின் மறுபகுதிக்கு சென்று விட்டால் வாடிப் போகும் புஷ்பத்தை கவனித்தீர்களா, யானை தந்தத்தை சிங்காசனமாக்கி வெள்ளியை மண்ணைப்போல கொண்டிருந்த சாலொமோனே தன் மகிமையில் அப்படி உடுத்தியதில்லை. **பறவைக்கும், புஷ்பத்துக்கும் இப்படி செய்கிறவர் உங்களுக்கும், எனக்கும் செய்யமாட்டாரா? நிச்சயமாக செய்வார். நீங்கள் கவலைப்படுகிறதென்ன? கவலைப் படாதிருங்கள். கர்த்தர் இரங்குவார்.**

சரி, நாம் கவலைகளை நமது உள்ளத்தை விட்டு இப்போது நீக்கி விடுகிறோம்! உள்ளம் வெற்றிடமாகிறது, அது வேறு நல்ல காரியத்தால் நிரப்பப்படாவிட்டால், சாத்தான் இன்னும் ஏழு மடங்கு வேலை செய்து விடுவான் (லூக்கா.11;24-26). ஆகவேதான், இயேசு சொல்லும்போது, முதலாவது, இறை அரசுக்குரியவைகளை நாம் தேடுவோமானால் இவைகள் (உணவும், உடையும்) நமக்கு கூடக் கொடுக்கப்படும் என்கிறார் (மத்.6;33). ஆகவே எனக்கன்பானவர்களே! அவர் சொன்னபடி நாம் செய்வோம், நாளையைக் குறித்தான கவலை நம் நாடி நரம்புகளை நலிவடைய செய்யாதிருப்பதாக! நாளைக்காக நாளையே கவலைப்படட்டும்.

வாலிபர்களே! நாளைக்காக கவலைப்படவேண்டாம் என்று சொல்லப்படும்போது, தேவன் நமக்கு எல்லாவற்றையும் தானே கொடுத்து விடுவார்! நாம் ஒன்றும் செய்யத் தேவையில்லை என்று நினைக்கலாகாது, நாளை குறித்து நாம் திட்டமிடவும், முயற்சிக்கவும் செய்யலாம், ஆனால் அதே நினைப்பினால் வாடி வதங்கி சூடா மலர் போல் சுருங்கி போய் விடக் கூடாதென்றுதான் நமது ஆண்டவர் கூறுகிறார். ஒரு அறிஞன் கூறும்போது "எல்லாம் அவராலே ஆகும் என்பதை உணர்ந்து ஜெபிப்போம், நம்முடைய முயற்சியை அவர் நிச்சயமாக ஆசீர்வதிப்பார் என நினைத்து செயல்படுவோம்". என்கிறார். ஆகவே, இயேசுவின் ஆலோசனையின் படியும், அப்போஸ்தலர்களின் ஆலோசனையின்படியும் நடப்போம், தேவனிடம் கவலைகளை தெரியப்படுத்துவோம், அவர் மீது கவலைகளை வைத்து விடுவோம், அவருக்குரியவைகளை நாடுவோம். அப்படி நாம் செய்யும் போது தேவன் நிச்சயமாக எதிர்வரும் புத்தாண்டை நமக்கு ஆசீர்வாதமாக்கித் தருவார்! ஆமென்!

**ஜே. பிக்கின்ஸ்**

# ரோமர் ஒரு கண்ணோட்டம்

ஆசிரியர் : **அப்போஸ்தலனாகிய பவுல்**

காலம் : **ஏறக்குறைய சுமார் 57-58 கி.பி.**

## இந்நூலைப்பற்றி...

1. அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரி சபையாரை, இந்நூல் எழுதப்படும் வேளைவரை நேரில் கண்டதில்லை.
2. இந்நூலின் கருப்பொருள் 1;16ம் வசனத்தில் தெளிவாக சொல்லப் பட்டிருக்கிறது. சுவிசேஷம் தேவ பெலனாக இருக்கிறது என்பதை இந்நூலின் கருப்பொருளாயிருக்கிறது.
3. இந்நூலை கொரிந்து பட்டணத்திலிருந்து, தனது மூன்றாவது சுவிசேஷ பிரயாணத்தின் போது பவுல் எழுதியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.
4. பெபேயா என்கிற ஸ்திரீ இக்கடிதத்தை ரோமாபுரிக்கு எடுத்துச் சென்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது (ரோமர் 16;1)
5. இந்நூலை அப்போஸ்தலனாகிய பவுல் எழுதிய சுவிசேஷம் என்று வேத அறிஞர்கள் அழைக்கின்றனர்.
6. பேதுரு முதல் போப் அல்ல என்பதை நிரூபிக்க இந்நூலின் கடைசி அதிகாரம் ஒரு சான்றாக திகழ்கிறது. ஏனெனில் அநேகருக்கு வாழ்த்துக்கள் கூறும் பவுல் பேதுருவுக்கு வாழ்த்துக்கள் கூறுவதாக இல்லை. போப்பை பவுல் மறந்துவிட்டாரோ!
7. இந்நூல் புதிய ஏற்பாடு முழுவதிலும் எழுதப்பட்ட நூல்களின் மிகச் சிறப்பான இலக்கிய நூலாக திகழ்கிறது.

## இந்நூலின் செய்தி

1. தேவன் தம் ஜனமாகிய இஸ்ரவேலரையும், புறஜாதியையும் ஒன்றாக்கியிருக்கிறார்.
2. நியாயப்பிரமாணமில்லாமல், தேவ நீதியாகிய சுவிசேஷம் வெளிப்பட்டிருக்கிறது.
3. சுவிசேஷமாகிய விசுவாசத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

# இயேசு எப்பொழுது பிறந்தார்



அன்பான இயேசு ஆண்டவர் பரலோக இராஜ்யத்திற்கு பாத்திர வான்களாக வேண்டுமென்று விரும் புகிறவர்கள் உங்களைப் போல மாற வேண்டும் என்று சொன்னார். அப்படிச் சொல்லும் அளவுக்கு அதிகமாக அவரால் நேசிக்கப்படும் எனக்கன்பான சிறு தம்பிகளே, தங்கைகளே! உங்களை யெல்லாம் இவ்வருடத்தின் இறுதி மாதத்தில் இக்கட்டுரை மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உலகம் இம்மாதம் 25ம் தேதி தான் இயேசு பிறந்தார் என்று சொல்லி அதை கோலாகலமாய் கொண்டாடுகிறது. இதை வாசிக்கும் நீங்கள் கூட உங்கள் வீட்டில் புது ஆடைகள், அலங் காரங்கள் எல்லாம் செய்திருப்பீர்கள் அப்படித் தானே. சரி நாம், இயேசு எப்போது பிறந்தார் என்பதைப் பற்றி சில காரியங்களை சிந்திப் போமா!

தம்பிகளே, தங்கைகளே, உண்மையைச் சொன்னால், இயேசு எந்த நாளில், எந்த வருடத்தில் பிறந்தார் என்பது பற்றி ஒருவருக்கும் நிச்சயமாக தெரியாது. வேதாகமம் இதைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை, ஆதி சபைக்கு அப்படிச் சொல் லப்படாதிருப்பது ஒரு பெரிய காரியமாக தெரியவில்லை. அக்காலத்தை சேர்ந்த மிக சிறந்த கிறிஸ்தவ எழுத் தாளர்களும், சிந்தனையாளர்களும் இயேசு இந்த நாளில் தான் பிறந்தார் என்று கூறவில்லை.

ஏறக்குறைய கி.பி. 354-ல் ரோமாபுரியிலுள்ள கிறிஸ்தவ மார்க்கத் தலைவர்கள் டிசம்பர் 25ம் தேதி தான் கிறிஸ்து பிறந்தார் என்ற முடிவுக்கு வந்தார்கள். ஏன் இந்த தேதியை தேர்ந்தெடுத்தார்கள் தெரியுமா? தம்பிகளே, தங்கைகளே! மீண்டுமாக ஒருவருக்கும் நிச்சயமாக தெரியாது. ஆனால் கிறிஸ்தவர்கள் அல்லாத சிலர் சூரியக் கடவுளாகிய "சாலின்" பிறந்த நாளை இந்த நாளில் தான் கொண்டாடினார்கள். ஆகவே தங்களும் அன்று ஒரு பண்டி கையை கொண்டாட வேண்டும் என்பதற்காக அந்த தேதியை தெரிந்து எடுத்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

வருடத்தைப் பற்றி என்ன? இது மிக முக்கியம் வாய்ந்தது, ஏனென்றால் சிலர் லூக்கா (2;1-2)ல் எழுதப்பட்ட குடிமதிப்பு, எடுக்கப்பட்டிருக்குமா? என்று சந்தேகம் கொள்கிறார்கள். "குடிமதிப்பு" எடுக்கப்பட்டால், அது ரோமருக்கு ஜனங்களை தொகையிடவும், வரி வசூலிக்கவும் மிக பயன் உள்ளதாக இருக்குமாம். நீண்ட நாட்களாக வேதாகமத்தை குறை கூறுபவர்கள் கி.பி. 6ம் ஆண்டு வரை குடிமதிப்பு எடுக்கப்படும் பழக்கமே இருந்ததில்லை என்கிறார்கள். ஆனால் கி.பி.6ம் ஆண்டு இயேசுவின் பிறப்பின் ஆண்டாக இருத்திருக்க வாய்ப்பில்லை; ஆனால் இப்பொழுது கி.மு.8ம் ஆண்டில் குடிமதிப்பு எடுக்கப்பட்டது என்பதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கிறது.

அடுத்ததாக நாம் சிந்திக்க வேண்டியது மகா ஏரோது பிறப்பித்த உத்தரவு பற்றி. அவர்தான் பெத்லகேமிலும், அதன் சுற்றுப் புறத்திலும் உள்ள 2 வயதுக்குட்பட்ட சிறுவர்களை கொலை செய்யும்படி கட்டளையிட்டவன் இக்கொடியவன் தான். *(மத்.2;16). அதை செய்த சில காலங்களில், அதாவது கி.பி. 4ம் ஆண்டு 11ம் தேதி ஏரோது மரித்துப் போனான். ஏரோது பிறப்பித்த இக்கட்டளையில் இருந்து சிறு பிள்ளையாகிய இயேசுவைக் காப்பாற்ற எகிப்துக்குப் போயிருந்த யோசேப்புக்கு இவனுடைய மரணம் அறிவிக்கப்பட்டது. ஆகையால் கிறிஸ்து பிறப்பு கி.மு. 8முதல் கி.பி. 4ம் வருடத்திற்குள் அவர் பிறந்திருக்க வேண்டும்.

இன்றைக்கு கிறிஸ்துமஸ் என்பது ஒரு விசேஷ குடும்ப பண்டிகையாகவே மாறிவிட்டது. கிறிஸ்து பிறந்திருப்பதால் தான், இந்த நாள் கொண்டாடப்படுகிறது என்பது உண்மையானாலும், வேதாகமத்தில் நாம் வாசிக்கும் சபை இப்படிச் செய்யவில்லை என்பதை இச்சிறு பிராயத்திலேயே அறிந்து கொள்ளுங்கள். அந்த ஆதி கிறிஸ்தவர்கள் அவருடைய பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்ப்பு, ஆகியவற்றை வருடம் எல்லாம் நினைத்தார்கள். அதுபோலவே நாமும் நடப்பது நன்று. ஆகவே இச்சிறுவயதிலேயே நாம் அப்படி செய்து, தேவ ஆசீர்வாதம் பெறுவோம். ஆமென்! சிறு தம்பி! தங்கைகளே! உங்களுக்கு என் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

**R. Abel Rodger Nayagam**

## தானியேலின் தீர்மானம்

1. **தே**வனுக்கு சித்தமில்லாதவைகளை செய்யக் கூடாது என்று தன் இருதயத்தில் தீர்மானித்தான் (1;8)
2. பாவம் (தீமை) செய்யக்கூடாது என்று தீர்மானித்தான் (1:8)
3. தேவனுக்கு கீழ்ப்படிய தீர்மானித்தான் (1:8)
4. தானும், தன்னோடு இருந்த ஞானிகள் அழியாதபடிக்கு தீர்மானித்தான் (2:17)
5. தேவன் தனக்கு தந்த தரிசனத்தை வெளிப்படுத்த தீர்மானித்தான்(2;28)

# பரலோகம் செல்ல தகுதிகள் என்ன?

**சா**தாரணமாக ஒருவரை வேலைக்கு நியமிக்க வேண்டியிருந்தால் தகுதிகள் அடிப்படையில் அவரைத் தேர்ந்தெடுகிறார்கள். உதாரணமாக அவரது படிப்பு, வயது, உயரம், எடை, அறிவுத்திறன் போன்றவை. அதே போல ஒருவர் வெளிநாடு செல்லவேண்டுமானாலும் அடையாள அட்டை எனப்படும் பாஸ்போர்ட் தேவை. அதற்கும் நன்னடத்தை சான்றிதழ், அந்நாடு செல்வதற்கான காரணம் மற்றும் விசா போன்ற அனுமதி சான்றிதழ்கள் தேவை. பரலோகம் செல்ல இதுபோன்ற ஏதாவது தகுதிகள் தேவையா?

யாவரும் பரலோகம் செல்ல விரும்புகிறார்கள். ஆனால் பரலோகத்தின் தேவன் அவருடைய ராஜ்ஜியத்தில் பிரவேசிக்க இருக்க வேண்டிய தகுதிகள் பற்றி சொல்லியிருப்பதை கவனிக்க மறுக்கிறார்கள். அதைக் குறித்து தியானித்து, நிதானிக்க தேவன் கிருபை செய்வாராக:-

## 1. இயேசுவை சரியாக அறிந்து கொள்ள வேண்டும் (யோவான்.17;3)

*சிலர் இயேசுவை குழந்தை ஏசுவாக அறிகிறார்கள், சிலர் புத்தன், இயேசு, காந்தி என்ற ரீதியில் அவரை ஒரு சாதாரண மனிதனாக ஏற்றுக் கொள்கிறார்கள். சரித்திர ஆசிரியர்கள் கி.மு. மற்றும் கி.பி. என்று காலத்தைப் பிரிக்கும் அளவிற்கு அவரை அறிந்திருக்கிறார்கள். பலர் பல கோடி கடவுள்களில் அவரும் ஒரு அவதாரம் என்று வணங்குகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதம் அவரை உண்மையான ஒரே கடவுளின் ஒரே மகனாகத்தான் நமக்கு வெளிப்படுத்துகிறது.

நிக்கொதேமு இயேசுவிடம் வந்தபோது "மறுபடியும் பிறக்க வேண்டும்" என இயேசு சொன்னார் (யோவான்.3;5). அதில் ஆவியினாலும், ஜலத்தினாலும் என்ற வார்த்தைகளில் உள்ள ஆவியினால் - மனுஷனிலுள்ள ஆவியைக் குறிக்கிறது (1. கொரி.2;11). ஆனால் சிலர் தவறாக புரிந்து கொண்டு விளங்காத சத்தமிடுதல்தான் ஆவியினால் பிறப்பது என்று கிறிஸ்தவ மார்க்கத்தை கேலிக்கூத்தாக மாற்றுவதை அறிந்து வருகிறோம். நாம் வேத வசனங்களை உள்ளபடி கேள்விப்பட்டு அதை நம் மனதில் விசுவாசித்து மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரனென்று வாயினால் அறிக்கையிட்டு தண்ணீரால் முழுக்கு ஞானஸ்நானம் பாவ மன்னிப்பிற்காக பெற்றுக் கொள்வதையே ஆண்டவர் இங்குக் குறிப்பிடுகிறார். ஆகவே யாராயிருந்தாலும் பரலோகம் செல்ல அடிப்படையான ஒரு தேவையாக "இயேசு" இருக்கிறார். (யோவான்.14;6, அப். 4;12).

## 2. மனந்திரும்பிய பிள்ளைகள் போல் ஆகவேண்டும் (மத்தேயு, 18;3)

சிறுபிள்ளைகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெரிய[illegible]கள்

சொல்வதை அப்படியே ஏற்றுக் கொள்வதை, நம்புவதைக் காண்கிறோம். அதுபோலத்தான் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குரிய வசனங்களை நாம் அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளாவிட்டால் பரலோகம் செல்ல முடியாது என்று இயேசு சொன்னார். அப்படி ஒருவர் வசனங்களை ஏற்றுக் கொள்ள இருதயத்தில் தாழ்மை அவசியம். ஆவியில் எளிமையுள்ளவர்கள் என்று மத்.5;3-ல் ஆண்டவர் குறிப்பிடுவதும் இப்படிப்பட்டவர்களைத்தான். இந்த தாழ்மையை இயல்பாக மனிதன் பெறவே முடியாது. இது இயேசுவிடம் ஒவ்வொரும் கற்றுக் கொள்ள வேண்டிய முக்கியமான குணாதிசயமாகும் (மத்.11;29, யோவான்.13;15) நிச்சயமாக பேதுரு சொல்வதைப் போல் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (1. பேதுரு. 5;5).

## 3. நீதியினிமித்தம் துன்பப்படும் போது சோர்ந்து போகக் கூடாது (மத்தேயு.5;10)

அநேக மக்கள் வறுமைக்கு பயந்து நீதியை விட்டு விடுகிறதைப் பார்க்கிறோம். அதே வேளையில் நீதிமானாய் வாழ்கிறவன் சரீரபிரகாரமாய் கெட்டுப் போவதுண்டு (பிர.7;15) நீதிமானுக்கு பலன் சிலநேரம் எதிர்மறையாய் அமைவதுமுண்டு (பிர.8;14) இதை எரேமியா தீர்க்கதரிசி தேவனிடமே கேட்டு அங்கலாய்ப்பதை நாம் எரே.12;1-ல் பார்க்கிறோம். துரோகிகள் சுகித்திருக்கிறதென்ன? அவர்கள் முடிவுவேறு நம் முடிவு வேறு பந்தயங்களில் கலந்துகொள்கிறவன் எல்லாவற்றிலும் கட்டுப்பாடாய் இருப்பது போல நாம் இருக்கிறோம். ஆண்டவர் வார்த்தை சொல்வது என்ன? உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன் கொள்ளுங்கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார். (யோவான்.16;33)

ஆண்டவரும் உலகத்திலிருந்தபோது பசி, தாகம், சோர்வு, கலக்கம், கண்ணீர் யாவற்றையும் அனுபவித்தும் பாவஞ்செய்யாதவராய் நமக்கு மாதிரியை பின்வைத்துப் போனார் (1.பேதுரு.2;22) பரிசுத்தமில்லாமல் தேவனை தரிசிக்க முடியாது என்பது போல் பாடுகள் இல்லாமல் பரலோகம் இல்லை (அப்.14;22).

## 4. பரலோகப் பிதாவின் சித்தப்படி செய்யவேண்டும் (மத்.7;21)

நாம் தேவனால் அழைக்கப்பட்டிருப்பது, சபையில் இயேசுவின் நாமத்தில் கூடி அவரை மகிமைப்படுத்துவது தேவ சித்தமாயிருக்கிறது. நாம் பரிசுத்தமாகுதலே பிதாவின் பிரதான சித்தம் எனலாம். நாம் பாவங்களை விட்டோய்வதும், கிறிஸ்துவின் சிந்தையை அணிவதும் வேண்டும். மேலும் கிறிஸ்துவை மற்றவர்களுக்கு அறிவிக்கும் சுவிசேஷப் பணியும், அனைவரின் இரட்சிப்பிற்காக ஜெபம் செய்வதும் அவசியம். அதே வண்ணம் நாம் நற்குணசாலிகளாய் மாறவும், கிறிஸ்துவின் சாயலில் வளரவும் அவர் விரும்புகிறார். அதற்காக வேதவாசிப்பு தினந்தோறும் அவசியமாகிறது.

## 5. நம்முடைய நீதி அதிகமாய் இருக்க வேண்டும். (மத்.5;20)

உலகில் நீங்கள் பார்க்கும் எந்த நல்ல மனிதனைக் காட்டிலும் நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருப்பதால் அதிக நீதியாய் நடப்பது அவசியமாகிறது. உங்களை சிநேகிப்பவர்களையே சிநேகிப்பதும், நன்மை செய்பவர்களுக்கு பதில் நன்மை செய்வதும் சாதாரணம். ஆனால் சத்துருவை சிநேகிக்கும் மனப்பக்குவம் வரவேண்டும். போதை வஸ்துகள், புகைக்கும் பழக்கம், சினிமாவுக்கு செல்லுதல் யாவும் நம் நீதியைக் கண்டிப்பாய் குறைத்து விடும். கெட்ட வார்த்தை பேசாமல், கடன்படாமல் (ரோமர்.13;8) வாழ்வது கிறிஸ்தவனின் கடமையாயிருக்கிறது.

ஊழியரை தவறாய் பேசாமல் கனம் பண்ணவேண்டியதும் அவசியமாகும். (மத்.7;1-3) ஊழியம் செய்பவர் குறை சொல்வதில்லை. குறை சொல்பவர் ஊழியம் செய்வதில்லை. எபி.13;17 மற்றும் 1. தீமோ.5;17ஆகிய வேத வசன பகுதிகள் ஊழியரை கனம் பண்ணவேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது (மத்.12;25) குறை சொல்வதை விட ஒன்று அக்காரியம் நியாயத்தீர்ப்பு நாளுக்காக விட வேண்டும் அல்லது சொல்பவர் குறையிருப்பவரை விட்டு விலக வேண்டும் அல்லாமல் கலகம் செய்வது தேவனுக்கு புறம்பானது.

## 6. ஐசுவரியம் நம்மை தடை செய்கிறது (மத்.19;14)

ஐசுவரியம், பண ஆசை, பொருளாசை ஐசுவரியத்தின் மயக்கம் ஆகிய அநேக வார்த்தைகள் வேதாகமத்தில் நம் எச்சரிப்பிற்கும், தெளிவிற்கும் பயன் படுத்தப்பட்டுள்ளது. இது தேவனுடைய ராஜ்ஜியத்திற்கு நாம் தரவேண்டிய முக்கியத்துவத்தை தட்டிப் பறிக்கிறது. மட்டுமல்ல, எல்லா தீமைக்கும் வேராகவும், நாம் பலன் கொடுக்க முடியாதபடியும் செய்கிறது.

நம்மில் பலர் நினைப்பது போல ஐசுவரியம் இன்பமானதும் அல்ல, தரித்திரம் கொடுமையானது அல்ல. யாக்.5;1-5 மற்றும் யாக் 4;18ல் இதன் தீமைகள் விரிவாக உள்ளது. சுயநலமாக சேர்க்கிறவர்கள் மதிகேடர் என்று ஆண்டவர் (லூக்.12;21) கூறுகிறார்.

வேத வசனத்தின் படி இது விசுவாசக்குடும்பத்தாருக்கும் உதவியற்ற ஊழியருக்கும் பயன்படும் போது இதன் நோக்கம் நிறைவேறும்.

## 7. பின்வாங்கும் இருதயம் கூடாது (எபி.3;12)

அதற்கு இயேசு: கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குத் தகுதியுள்ளவன் அல்ல என்றார் (லூக் .9;62) நம்முடைய வீட்டார், உலக சிநேகம், நன்மை செய்வதில் சோர்வு, உலகக் கவலை, பிரியமானவர்களின் இழப்பு போன்ற எந்தவொன்றும் நம்மை மாற்றாதபடி உறுதியாயிருக்க தேவன் தாமே நம் அனைவருக்கும் கிருபை செய்வராக. ஆமென்(ஆபகூக்.3;17-19)

சகோ. **K. பாண்டியன்**

# சபை விவாகம் மற்றும் விவாகரத்து விஷயங்களில்தேவனுடைய உபதேசத்தை மட்டுமே பற்றிக் கொண்டுள்ளது.

திருமணம் என்பது ஒரு நிலையான குடும்பத்தை நிறுவும்பொருட்டு ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தங்களை இணைத்துக் கொள்ளும் உடன்படிக்கையாகும். ஆதாம் ஏவாளை சிருஷ்டித்ததின் மூலம் தேவனால் திருமணம் ஸ்தாபிதம் பெற்றது. ஆணும் பெண்ணுமான இந்த முதல் தம்பதிதான் திருமணத்திற்கான நியமனம் பெற்றனர் (ஆதி.1:27), ஆதலால், ஆணும் பெண்ணும் ஒரே மாம்சமாகும்" சிலாக்கியத்தைப் பெற்று திருமண பந்தத்தில் தெய்வீக ரீதியில் பிணைக்கப்படும் ஒழுங்குமுறை நிறுவப்பட்டது (ஆதி.2;24).

திருமண பந்தத்தின் பாதுகாப்பு ஒரு முழு சமுதாயத்தின் நலனுக்காக மெய்யாகவே முக்கியத்துவம் வாய்ந்தது. முதலாவதாக குடும்பத்தின் ஒற்றுமையில்தான், ஒரு உறுதித் தன்மையும், குடும்பப் பெயரைத் தரித்துக் கொள்ளும் உரிமையும், சொத்தின் பாதுகாப்பும், அன்பும் அசைக்க வொன்னா நம்பிக்கையும், கொண்ட ஒரு சூழல் உருவாகிறது. இரண்டாவதாக, திருமணம் தான் ஒரு சமுதாயத்தின் ஸ்திரத் தன்மையை நிலை நாட்டுகிறது. திருமண பந்தமின்றி எந்த சமுதாயமும் நிலை பெறாது. "திருமண பந்தமில்லாத ஒரு சமுதாயம் இல்லை என்பது தான் உண்மை"

தேவனுடைய மூலாதார திட்டத்துடன் திருமணம் ஒத்துப் போகும் போது, அது நிச்சயமான கனத்தைக் கொண்டு வருகிறது. "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிபடாத தாயுமிருப்பதாக...." (எபிரேயர்.13;4). ஒருவர் தாம் விவாகம் செய்ய விருப்பமில்லாத அளவுக்கு சூழ்நிலை உருவாகும் 'போதே அல்லாமல் (1.கொரி.7;26, 28, 32, 35, 40). "மனுஷன் (அல்லது ஸ்திரி) தனிமையாயிருப்பது நல்லதல்ல" (ஆதி.2;18). "விவாகம் பண்ணாதிருக்க" கட்டளையிடுவது திருமறைக்கு முரணானது (1. தீமோ.4;1-3).

தேவனால் நிர்மானிக்கப்பட்ட பரிசுத்த விவாகம், பல நிச்சயமான பலன்களைக் கொண்டது. முதலாவதாக, மேலே குறிப்பிட்டபடி இது தனிப்பட்ட முறையில் இருவருக்குள்ளும் மிகுந்த நெருக்கத்தை ஏற்படுத்துகிறது (ஆதி.2;18). மூன்று நபர் தத்துவம் கொண்ட ஆனால் ஒருமித்த கருத்தையுடைய தெய்வத்தின் சாயலில் மனித வர்க்கம் உண்டாக்கப்பட்டது. இரண்டாவதாக, விவாகம் தான் முறையாக பிள்ளைகளை உலகத்தில் உருவாக்கக் கூடியது (ஆதி.12;28. 1.தீமோ. 5.14). மூன்றாவதாக, விவாகம் ஒரு

ஆணுக்கும் பெண்ணுக்கும் தேவன் கொடுத்த அவர்கள் சரீரத்தில் தோன்றும் பாலுணர்வில் ஒழுக்க ரீதியான திருப்தியைக் கொடுக்கிறது. முறையான விவாகத்தில் தான், "பாலுணர்வில் மஞ்சம் அசுசிபடாது" (எபிரேயர்.13;4).

மிடுக்கான ஐக்கியத்திற்கு. வழிவகுக்கும் தேவனுடைய தெய்வீகப் பொருத்தம் விவாகத்தில் இணைக்கப்பட்ட இருபேருடைய மரண பரியந்தம் நிலைத்திருக்கக் கூடியது. இருவரில் ஒருவர் மரித்தாலும், இந்த உறவு முறியும் (ரோமர்.7;2,1.கொரி.7;39) மரணத்திற்குப் பிறகு எந்த ஒரு விவாகமும்" தொடர்வதில்லை (மத்.22;3).

விவாகரத்து - தேவனே விவாகத்தின் ஊற்றுக்காரணமாக இருக்கிறபடியால், விவாகத்தம்பதி இருவரும் உயிரோடிருக்கும் காலத்தில் எந்த சூழ்நிலையில் விவாக முறிவு ஏற்பட வேண்டும் என தீர்மானிக்கும் அதிகாரம் அவருக்கு மட்டுமே உரியது. எனவே விவாகரத்திற்கு தேவனுடைய சித்தம் என்ன? உண்மையில் விவாகரத்தை தேவன் "வெறுக்கிறார்" (மல்கியா.2;16). கர்த்தரால் அனுமதிக்கப்பட்ட விவாகரத்தே ஆயினும், இருவரில் ஒருவராகிலும் திருமண ஒப்பந்தத்தை மீறும்போது தான் அது அமுலாகிறது. எந்த விவாகரத்தும் தவறு செய்யாத தம்பதி இருவருக்கிடையே நிகழக் கூடியதல்ல; ஒருவர் தவறு செய்யாதவராயிருப்பார், மற்றொருவர் தவறு செய்திருப்பார், அப்பொழுது விவாகரத்து ஏற்படுகிறது.

பழைய ஏற்பாட்டின் கீழ், ஒருவனுடைய மனைவியினிடத்தில் அவன் இலச்சையான காரியத்தைக் கண்டு "அவள் மேல் பிரியமற்றவனானால், அவன், தள்ளுதல் சீட்டை எழுதி அவள் கையிலே கொடுத்து, அவளைத் தன் வீட்டிலிருந்து அனுப்பி விடலாம்" (அதாவது அவளை விவாகரத்து செய்து விடலாம் உபாகமம் 24;1) : இருப்பினும் இது பரலோகத்தின் ஆரம்ப குறிக்கோளுக்கு முரண்பட்டதல்ல. இஸ்ரவேல் ஜனங்களின் "கடின இருதயத்தினிமித்தம்" தேவன் மோசேயின் மூலம் அதைச் சகித்துக் கொண்டார். "ஆதி முதல் அப்படியிருக்கவில்லை என்றார் (மத்.19;8). ஏவப்பட்ட இந்த வசனப் பகுதியின் உட்கருத்து என்னவெனில், தேவனுடைய பூர்வாங்க திருமணத்தைக் குறித்த திட்டம் மோசேயின் பிரமாணத்தின் கீழ் அப்படி அனுமதிக்கப்பட்டிருந்தும், ஏதேனில் உருவான நோக்கத்திலிருந்து மாறுபடவே இல்லை. பிறகு இந்த புதிய ஏற்பாட்டு பிரமாணத்தின் படி, இயேசு விவாகத்தின் நோக்கத்தை முறையாக மீட்டமைத்தார். அதற்கொப்பாகத் தான் கர்த்தர், "ஆதலால், எவனாகிலும் தன் மனைவி வேசித் தனத்தினிமித்தமேயன்றி, அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரம் செய்கிறவனாயிருப்பான்" (மத்.19;7) இந்தக் குறிப்பிடத்தக்க வசனத்தில் அநேகக் கருத்துக்களைக் கூறலாம்.

முதலாவதாக இது ஒரு உலகளாவிய பொதுக் காரியமாக இயேசு பேசுகிறார் என்பது தெளிவு. அதாவது இச்சட்டம் அனைத்து மனித வர்க்கத்தினாலும் பொதுவானதாக கைகொள்ளப்படவேண்டியது. "எவனாகிலும்" எனும் பதம்

ஒவ்வொரு நபரையும் குறிப்பது (மத்.5;22,31,32) ஆதலால், திருமணத்தில் இணையும் மனிதர்கள் ஒவ்வொருவரும், தனது ஒழுக்க ரீதியான காரியத்திற்குட்பட்டவன்.

இரண்டாவதாக, ஒருவரும் "தனது துணையைத் தள்ளிவிடக் கூடாது" (விவாகரத்துச் செய்யக் கூடாது) வேசித்தனத்தினிமித்தமே விவாகரத்துச் செய்யலாம். வேசித்தனம் என்றால், முறையற்ற அனைத்து வித பாலுணர்வில் உடல் உறவைச் சுட்டிக் காட்டுகிற ஒரு பொதுவான பொருளையுடையது. கர்த்தர் இப்படியாக விவாகரத்தையும், மறுமணம் செய்தலையும் வேசித்தனம் செய்தால் என்ற அடிப்படையில் அனுமதிக்கிறார். சாத்தியக்கூறை கண்ணோக்கில் பார்த்தால் (அனுமதிக்கப்படாத, முறையற்ற பாலுறவில் ஈடுபடாத) குற்றமற்ற நபர், வேசித்தனம் செய்த தனது துணையை விவாகரத்துச் செய்யவும் விரும்பினால் மறுமணம் செய்யவும், உரிமை பெற்றவர். எதிர்மறைக் கண்ணோக்கில் வேசித்தனத்திற்கு அப்பாற்பட்ட ரீதியில் ஒருவர் விவாகரத்து கொடுத்தால், அவர் மறுமணம் செய்யும் அனுமதியில்லாதவர்.

மத்.19;9ன்படி வேசித்தன முகாந்திரத்தினாலேயன்றி வேறே காரணத்திற்காக விவாகரத்துச் செய்தால், "தானும் வேசித்தனம் செய்வதாகும்". திருமறையில், விபச்சாரம் என்பது, "தனது முறையான திருமணத் துணையேயன்றி வேறொரு நபருடன் மனமுவந்து வைத்துக் கொள்ளும் பாலுறவைச் சுட்டிக் காட்டுகிறது. இப்பதத்தின் வினைச் சொல்லின் காலம், கிரேக்க புதிய ஏற்பாட்டில், ஒரு தொடர் செயலைக் குறிப்பிடுவதாகும். இன்னொரு வார்த்தையில் சொன்னால், இப்படிப்பட்ட முறையற்ற உறவை வைத்துக் கொள்ளும் நபர், தான் மணக்கும் புதிய துணையுடன் "தொடர்ந்து விபச்சாரம் செய்வதைக் குறிக்கிறது. முறையற்ற விவாகரத்து செய்தவரை "புதுமணம்" செய்து கொள்ளுகிற நபரும் விபச்சாரத்தில் ஈடுபடுபவராகிறார் அல்லது பேராசிரியர் வில்லியம் பெர்க் தனது மொழிபெயர்ப்பில் குறிப்பிட்டுள்ளபடி, "அந்த நபர் விபச்சாரத்தில் வாழ்கிறார்" இந்த இணைவு ஏன், "விபச்சாரம்" என்று அழைக்கப்படுகிறது என்பதற்கான காரணம் தெளிவானது, (மனிதச் சட்டத்தன்படி) விவாகரத்து பெற்ற நபர் ஒரு புதிய துணையுடன் இணைக்கப்பட்டாலும், தேவனின் பிரமாணத்தின்படி, அவன் இன்னமும் முந்தின மனைவிக்கே வாழ்க்கை பிரமாணத்தின்படி, வாழ்க்கைத் துணையாவார். புதிய இணைவு, தேவனுடைய அங்கீகாரம் பெற்றதல்ல.

மத்.5;35-ல், கிறிஸ்து, "......வேசித்தன முகாந்திரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன் அவளை விபச்சாரம் செய்யப் பண்ணுகிறவனாயிருப்பான்......" (மத்.5;32). என்று போதித்தார். காரணமின்றி தள்ளிவிடப்பட்ட ஸ்திரீ, தள்ளிவிடப்பட்டதினால் மாத்திரம் விபச்சாரியா வதில்லை. ஆகிலும் அவள் வேறொருவரை மீண்டும் விவாகம் செய்யும்போது விபச்சாரியாகிறாள்.

விவாகரத்துக்கு மற்றொரு காரணமாக சிலர் கூறுவதாவது: ஒரு கிறிஸ்தவன், ஒரு அவிசுவாசியை விவாகம் செய்திருந்து, அந்த அவிசுவாசியினால் கிறிஸ்தவன் கைவிடப்பட்டால், இவர் மறுமணம் செய்ய உரிமை பெற்றவராகிறார் என்கின்றனர். இதற்கு ஆதாரமாக 1. கொரி.7;15ஐ சுட்டிக் காட்டி அவிசுவாசி கிறிஸ்தவனைப் பிரிந்து போனால், கிறிஸ்தவன் இனியும் "அடிமைப்பட்டவன் அல்ல" என்று கூறுகின்றனர். இப்படியாக அந்தக் கிறிஸ்தவன் "அடிமைத்தனத்திலிருந்து" விடுதலைப் பெற்று மறுமணம் செய்து கொள்ளலாம் என்று தங்களுக்குள்ளே திருப்திபட்டுக் கொள்கின்றனர். இங்கு கூறப்படும் "அடிமை பட்டவர்" என்னும் பதம், நேரடிப் பொருளில் "கொத்தடிமைத்தனம்" என்று அர்த்தம் கொடுக்கிறது. (தீத்து. 2;3-ல் "அடிமைத்தனம்" என்று பொருள்படும். இதே கிரேக்கப்பதம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் விவாக பந்தம் என்பது ஒருபோதும் அடிமைத்தனத்திற்குட்படுத்துவதில்லை! அவிசுவாசியான ஒரு வாழ்க்கைத்துணை விசுவாசியான கிறிஸ்தவனைப் பார்த்து, "கிறிஸ்துவை விட்டு வெளியே வா இல்லையென்றால் பிரிந்து போகிறேன்" என்று கூறும்போது, கிறிஸ்துவை விசுவாசி அந்த அவிசுவாசியை பிரிந்து போகும்படி" விட்டு விடலாம். முரட்டாட்டமுள்ள அந்த அவிசுவாசியின் எண்ணங்களுக்கு கிறிஸ்தவன் கட்டுப்பட்டவரல்ல (அடிமைப்பட்டவரல்ல) ஆகிலும் அந்த கிறிஸ்தவன் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று வசனத்தில் கூறப்படவில்லை. பவுல் சொல்லிய இந்த வசனப் பகுதியில் அவர் வாயில் வராத கூற்றை உட்படுத்துவது வீணானது".

புதிய ஏற்பாடு விவாகம், மற்றும் விவாகரத்துக் குறித்து மிகவும் கண்டிப்புடன் போதிக்கிறது, விசேஷமாக இன்றைய சமுதாயத்தின் ஒழுக்க சம்பந்தமான காரியங்கள் தளர்த்தப்பட்டுள்ள சூழ்நிலையுடன் ஒத்துப் போகிற நிலையை அது கண்டித்து போதிக்கிறது. தங்களைத் தாங்களே இருதயத்தை பிழிந்தெடுக்கும் ஒழுக்க மற்ற காரியங்களில் அறியாமையினால் அநேகர் தங்களை உட்படுத்திக் கொள்கின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆகிலும் இந்த இன்றியமையாத உண்மை கைகொள்ளப்படுவது அவசியம். பலவீனமும் பாவமும் நிறைந்த மனிதர்கள் மீது பரிதாபப் பட்டு உதவ நினைக்கும் அதே வேளையில், சீர் குழையும் சமுதாயத்திற்கென பரிசுத்த வசனத்தின் தராதரத்தை நாம் குறைத்து விட முடியாது. மாறாக, தேவனால் ஏவப்பட்ட சத்தியத்தின் அதிகாரத்தை உயர்த்தும் வகையில் சிறப்பான ஜனங்களை உருவாக்கும் சவாலை நாம் மேற்கொள்ள வேண்டும். கிறிஸ்தவத்திற்கு பெரிதான தியாகங்கள் தேவை; அது அநேகருடைய உயிர் விடுதலைக் கூட கண்டது. எனவே, இதற்கான கிரயம் எதுவாயினும், சத்தியத்தை, முழு சத்தியத்தையும் தேடுவதற்குத் தேவையான தைரியத்தைப் பெற்றுக் கொள்வோமாக. சத்தியத்தையேயன்றி வேறெதையும் தேடாமலிருப்போமாக. சர்வ வல்லமையுள்ள தேவன் தாமே நியமித்த குடும்பத்தின் நல்லொழுக்கத்தைக் காக்கவும் உயர்த்தவும், கிறிஸ்துவின் சபையார் தங்களது சகக் கிறிஸ்தவர்களை வலியுறுத்துகிறார்கள்.

# விசுவாசத்தின் அடிப்படைகள்

நாம் ஏன் தேவனுடைய வார்த்தைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பதற்கு 6 காரணங்களை சென்ற மாதம் பார்த்த நாம் தொடர்ந்து இன்னும் பல காரணங்களை பார்ப்போம்.

7. இரட்சிக்கப்படத்தக்க ஞானவான்களாக நம்மை அது மாற்ற முடியும். (2 திமோத்தேயு 3:15).

8. நம்மை முழுமையாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் செய்கிறது. (2 தீமோத்தேயு 3:17).

9. நம்மை உருவாக்கி நமக்கு சுதந்தரத்தைக் கொடுக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. (அப்போஸ்தலர் 20:32).

10. இது சுத்தமானது. நாம் அதற்குக் கீழ்படிந்தால் தேவன் நம் ஆத்துமாவை சுத்திகரிப்பார் (சங்கீதம் 12:6, 1 பேதுரு 1:23)

# தெரிந்து கொள்ளுங்கள்

இயேசுக் கிறிஸ்து குளிர்காலத்தில் பிறந்தாரா என்பதை வேதத் துணையுடன் சற்றுச் சிந்திப்போமா ! லூக்கா. 2:1-5 வாசித்தால், வசனம் 1ல் குடிமதிப்பு எழுதவேண்டும் என்று வாசிக்கிறோம். வசனம் 5ல் இயேசுவின் பெற்றோராகிய யோசேப்பும், மரியாளும் நாசரேத்திலிருந்து பெத்கலகேமுக்கு போயிருக்கிறார்கள். என்று வாசிக்கிறோம். இவ்விரண்டு ஊருக்கும் இடையே உள்ள தூரம் 70 மைல் என்று சொல்லப்படுகிறது. (சுமார்.120 கி.மீ.) அந்த காலத்தில் வாகன வசதிகள் கிடையாது. கழுதையின் மேலோ, நடந்தோ பிராயாணம் செய்வார்கள். இயேசுவின் பெற்றோர் அவர்கள் நடந்தோ அல்லது கழுதையின் மீது சேணம் வைத்தோ போயிருக்கலாம். பொதுவாக ரோமர்கள் குளிர் காலத்தில் குடிமதிப்பு எழுத கட்டளை கொடுக்க மாட்டார்கள். ஏனென்றால் வெகுதூரத்திலிருந்து வருகிறவர்களுக்கு குளிர்காலம் ஒரு தடையாக இருக்கும். நம்முடைய கணக்கின் படி நவம்பர் முதல் பிப்ரவரி வரை குளிர்காலம் இந்தக் காலத்தில் இயேசுக் கிறிஸ்து பிறந்திருக்க வாய்ப்பில்லை. சில வேத விற்பன்னர்கள் இயேசுக் கிறிஸ்து ஏப்ரல் அல்லது மே மாதத்தில் பிறந்திருக்கலாம் என்று கூறுகிறார்கள்.

11. அது ஜீவிக்கிறதும் நிலைத்திருக்கிறதும் என்றும் நிற்கிறதுமாயிருக்கிறது. (1 பேதுரு 1:23, 25).

12. இது ஒருக்காலும் ஒழிந்து போகாது. (மத்தேயு 24:35)

13. நாம் வளர இது உதவும் ( 1 பேதுரு 2:2)

14. நாம் இதை நம் உள்ளத்திலே பதித்துக் கொண்டால் நம் ஆத்துமாக்களை இரட்சிக்கும் . யாக்கோபு 1:2 எபேசியர் 1:13.

15. அது இரட்சிப்புக்கேற்ற தேவ பெலனாயிருக்கிறது. (ரோ.1:13)

16. இது தேவனுடைய நீதி அல்லது நியாத் தீர்ப்பை வெளிப்படுத்துகிறது. (ரோமர் 1:17).

17. கிறிஸ்துவின் ஆராய்ந்து முடியாது ஐசுவரியத்தைப் பற்றி நமக்குச் சொல்லுகிறது (எபே 3:8)

18. இது பரிபூரணமான சுயாதீனப் பிரமாணம் (யாக் 1:25)

19. நம்முடைய இருதயங்களிலே இதை வைத்துக் கொண்டால் தேவனுக்கு விரோதமாக பாவஞ் செய்யாத படிக்கு நம்மைப் பாதுகாக்கிறது. (சங்கீதம் 119:105)

20. வேதனைக்காலத்தில் இதனிடம் நாம் திரும்ப வேண்டும் சங்கீதம் 119:50, 71)

21. இதை நேசிக்கிறவர்களுக்கு தேனினும் இனிமையானது (சங் 119:103)

22. இதன்மூலம் நாம் புரிந்து கொள்ளுதலைப் பெற்றுக் கொள்ளுகிறோம் (சங்.119:10......)

23. இது நம் கால்களுக்கு தீபமும், பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105)

24. இது அதிசயமானது (சங்கீதம் 119:129)

25. அது ஒளியையும் புரிந்து கொள்ளுதலையும் கொடுக்கிறது (சங்.119:130)

26. நம்முடைய நடைகளை ஒழுங்காக்கும்படி அது கொடுக்கப்பட்டுள்ளது. (சங்கீதம் 119:123)

27. அது தியானிக்கப்பட வேண்டிய ஒன்று. (சங்கீதம் 119:148)

28. அது சத்தியம். சங்கீதம் 119:151. யோவான் 17:17 எபேசியர் 1:13.

29. அது ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது. (சங்கீதம் 119:161)

30. இது மகிழ்ச்சியை உண்டு பண்ணுகிறது. நம் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இது எழுதப்பட்டிருக்கிறது. (சங்கீதம் 119:192, 1 யோ 1:4.)

31. அதை நேசிப்பவர்களுக்கு மிகுந்த சமாதானத்தைக் கொண்டு வருகிறது. (சங்கீதம் 119:165) அது நீதியாகும். (சங்கீதம் 119:172)

32. அது நீதியாயிருக்கிறது. (சங்கீதம் 119:172) மேலும் இயேசு சொன்னார் நாம் அதன் மேல் தாகமாயிருந்தால் அதனால் நிரப்படுவோம். மத்தேயு 5:6.

33. இது பரிபூரணமானது. ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறது. நிச்சயமானது (சங்கீதம் 19:7)

34. அது நீதியானது. இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறது. சுத்தமானது. கண்களை பிரகாசிப்பிக்கிறது. (சங்கீதம் 19:8)

35. அது பசும் பொன்னினும் விலையேறப் பெற்றது (சங்கீதம் 119:127)

36. அது ஆவியாயும் ஜீவனாயுமுள்ளது (யோவான் 6:63)

37. அதனால் நாம் மறுபடியும் பிறக்கிறோம். (1. பேதுரு 1;23 1. கொரிந்தியர் 4:15 யாக்கோபு 1:18)

38. அதனால் நாம் ஜீவிக்கிறோம் (மத்தேயு 4:4)

39. அது நித்திய ஜீவனுக்குரிய வார்த்தை (யோவான் 6:18 பிலிப்பியர் 2:16)

40. அது இரட்சிப்பின் வார்த்தை (அப்போஸ்தலர் 13:26)

41. அது ஒப்புரவாகுதலுக்குரிய வார்த்தை (2 கொரிந்தியர் 5:19)

42. அது உயிர்ப்பிக்கிறதும், வல்லமையுள்ளதும் இருபுறமும் கருக்கான எந்த பட்டயத்திலும் கருக்கானதும் நினைவுகளை இருதயத்தையும் பகுத்தறிகிறதுமாயிருக்கிறது. (எபி 4:12)

43. அது அதிக உறுதியான தீர்க்க தரிசனமாயிருக்கிறது. (2 பேதுரு 1:19)

44. அது பாறைகளை துண்டு துண்டாக உடைக்கக் கூடிய அக்கினியாகவும், சம்மட்டியாகவும் இருக்கிறது. (எரேமியா 23:29)

45. அது நமக்கு ஆலோசனை சொல்லும்படியாக உள்ளது. (எபிரெயர் 13:22)

46. அது நம்மை பலப்படுத்துகிறது. (1 யோவான் 2:141)

47. கடைசி நாளிலே நாம் அதனால் நியாயந் தீர்க்கப்படுவோம். (ரோமர் 2:16)

வேதத்தைப் பற்றி யோவான் 12:48 ரோமர் 2:16 வேதத்தைப் பற்றி தெரியாத ஒருவர் சொன்னபின் வரும் வார்த்தைகள் எவ்வளவு உண்மையுள்ளதாயிருக்கிறது. **(தொடரும்).**

**G. தானியேல்** **CHARLIE DIPALMA.**